வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu — ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 21.09.2024 சனிக்கிழமை | இதழ் : 265 | பக்கங்கள் : 12

# ஜனாதிபதித் தேர்தல் வாக்குப்பதிவு இன்று!

## பொது மக்கள் காலை 7தொடக்கம் பி.ப. 4 மணி வரை வாக்களிக்கலாம்

கொழும்பு, செப்ரெம்பர் 21

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது. பொதுமக்கள் காலை 7 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை தமது வாக்குகளை செலுத்த முடியும்.

வாக்காளர்கள் அனைவரும் தமது ஜனநாயக கடமையை சரிசர நிறைவேற்ற வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

மக்கள் வாக்களிப்பதற்காக 13 ஆயிரத்து 421 வாக்களிப்பு நிலையங்கள் நாடு முழுவதும் அமைக்கப்பட்டுள்ளன. மக்கள் தத்தமக்கு ஒதுக்கப்பட்ட வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்று வாக்களிக்க

11





தியாகதீபம் திலீபனின் வரலாற்றை விளக்கும் ஆவணக் காப்பகம் நேற்று நல்லூரில் திறந்து வைக்கப்பட்டது. (படங்கள் : ஐ.சிவசாந்தன்)

ஜனாதிபதித் தேர்தலில்

# வாக்களிப்பதற்கு அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்கள்!

கொழும்பு, செப்.

வாக்காளர் ஒருவர் வாக்களிப்பதற்கு முன் தனது அடையாளத்தை உறுதிப்படுத்த தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப் பத்திரம், அரச சேவை ஓய்வூதியர் அடையாள அட்டை ஆகியவற்றை பயன்படுத்த முடியும்.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம். ஏ.எல்.ரத்நாயக்க விளக்கமளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வாக்களிப்பதற்காக தேசிய அடையாள அட்டையின் பழைய மற்றும் புதிய அடையாள அட்டைகள் இரண்டும் வாக்களிக்க

11

# இலங்கை தொடர்பான தீர்மானம் தொடர்பில் ஜெனிவாவில் ஆராய்வு!

ஜெனிவா, செப். 21

இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட 51/1 தீர்மானத்தை காலநீடிப்பு செய்யக்கோரி பிரிட்டன் தலைமையிலான இணை அனுசரணை நாடுகளால் தயாரிக்கப்பட்ட வரைவை வாக்கெடுப்புடனோ அல்லது வாக்கெடுப்பின்றியோ நிறைவேற்றுவதற்கான சாத்தியப்பாடுகள் குறித்து ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் ஆராயப்பட்டுள்ளது.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 57ஆவது கூட்டத்தொடர் கடந்த 9 ஆம் திகதி ஆரம்பமானது. அன்றைய தினமே இலங்கை தொடர்பான விவகாரம் விவாதத்துக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது, “இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்” என்ற தலைப்பிலான 51/1 தீர்மானத்தின் உள்ளடக்க அமுலாக்கம் தொடர்பில் கவனத்தில் கொள்ளப்பட்டது.

11

# 3 எம். பிக்களின் கட்சி உறுப்பினர் உரிமையை பறித்தது பெரமுன!

கொழும்பு, செப். 21

அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி உட்பட மூவரின் கட்சி உறுப்பினர் உரிமையை நீக்கியுள்ளதாக சிறீ லங்கா பொதுஜன பெரமுன அறிவித்துள்ளது.

இதன்படி, இரத்தினபுரி மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பவித்ராதேவி வன்னியாராச்சி, அநுராதபுரம் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் எஸ். எம். சந்திரசேன, களுத்துறை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ரோஹித அபேகுணவர்த்தன ஆகிய எம்.பிக்களின் கட்சி உறுப்புரிமையே இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை

11

# அமைதியான தேர்தலுக்கு ஒத்துழைக்குக

கொழும்பு, செப். 21

தேர்தல் தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ள ஆலோசனைகளை பின்பற்றி சுமுகமான முறையில் தேர்தலை நடத்த அனைவரின் ஒத்துழைப்பும் அவசியம் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்கா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பின் போது வாக்களிப்பு நிலையத்தில்

11

# நேற்று காலை திடீரென டுபாய் பறந்தார் பஸில்!

## அங்கிருந்து அமெரிக்கா செல்வாராம்

கொழும்பு, செப். 21

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ நேற்று வெள்ளிக்கிழமை கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக டுபாய்க்கு பயணமாகியுள்ளார் என விமான நிலையத்துக்கு பொறுப்பான அதிகாரி உறுதிப்படுத்தினார்.

11

# நாமலின் பிள்ளைகளும் வெளிநாடு சென்றனர்!

கொழும்பு, செப். 21

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரான நாமல் ராஜபக்ஷவின் இரு பிள்ளைகள், மாமியார், இரு பணிப்பெண்கள் மற்றும் உறவினரான பெண் ஆகியோர் நேற்று நாட்டை விட்டு வெளியேறினர்.

இவர்கள் 6 பேரும் நேற்று வெள்ளிக்கிழமை முற் பகல் 10.05 மணியளவில் எமிரேட்ஸ் எயார் லைன்ஸின் ஈ. கே. - 651 விமானத்தின் ஊடாக

11

# வாக்குச்சாவடிகளில் விசேட கண்காணிப்பு!

கொழும்பு, செப். 21

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தல் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ள நிலையில், தேர்தல் முறைகேடுகள் இடம்பெறுவதைத் தடுக்கும் நோக்கில் நாடளாவிய ரீதியில் நிறுவப்பட்டுள்ள வாக்குச்சாவடிகளில் விசேட கண்காணிப்புப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன், தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதன் பின்னர் உள்நாட்டு மற்றும் சர்வதேச தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் கடந்த ஒரு மாத காலமாக தேர்தல் வன்முறைகள் மற்றும் முறைகேடுகள் தொடர்பில் வலுவான கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன.

11



ஜனாதிபதித் தேர்தலுக்காக யாழ். மாவட்ட வாக்குச்சாவடிகளுக்கு யாழ். மத்திய கல்லூரியிலிருந்து வாக்குப் பெட்டிகள் எடுத்துச்செல்லப்பட்டன.
(படம் : ஐ. சிவசாந்தன்)

# பாராளுமன்ற தேர்தலுக்காக நாடு திரும்புவார் பஸில்!

## சாகர காரியவசம் தகவல்

கொழும்பு, செப். 21

முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நாட்டிலிருந்து வெளியேறியுள்ளதை பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் உறுதிப்படுத்தியுள்ளார்.

எனினும் அவர் கட்சியின் பொதுத் தேர்தல் நடவடிக்கைகளுக்காக விரைவில் நாடு

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘துயரம் தோய்ந்த நவாலி படுகொலைகள்’ ஆவண நூல் லண்டனில் வெளியிடப்பட்டது!

லண்டன், செப். 21

1995 ஜூலை 9ஆம் திகதி விமானப் படையின் குண்டு வீச்சில் படுகொலை செய்யப்பட்ட 153 பொதுமக்கள் தொடர்பான வரலாற்று ஆவண நூல் லண்டனில் வெளியிடப்பட்டது.

வல்வை அனந்தராஜ் எழுதிய இந்த ஆவண நூல் நேற்று முன்தினம் லண்டனின் - குறைடன் பகுதியில் உள்ள கேட் போர் கூடத்தில் வெளியிடப் பட்டது.

ஊடகவியலாளர் தம்பையா தயாபரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், நூலின் அறிமுக உரையை ஆசிரியர் கந்தையா பாலகிருஸ்ணனும்




வெளியீட்டு உரையை மகாலிங்கம் சுதாகரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து கருத்துரைகளை அருட்தந்தை ஜெபநேசன், சிவ சிறிராம் வாகீசக் குருக்கள், அரசியல் - இராணுவ ஆய்வாளர் கலாநிதி பிரபாகரன் மருத்துவர் திருமதி இந்துமதி ஆகியோர் வழங்கினர். இந்த நிகழ்வில் பலர் கலந்து கொண்டனர். (ஐ)



# பேருந்து கவிழ்ந்ததில் பலர் காயமடைந்தனர்

கொழும்பு, செப். 21

நேற்று மாலை பேருந்து கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் பலர் காயமடைந்தனர்.

மொனராகலையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த தனியார் பேருந்து மொனராகலை - கும்புக்கன கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

காயமடைந்தவர்கள் மொனராகலை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மொனராகலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஜனாதிபதித் தேர்தலுக்கு மன்னார் மாவட்டம் தயார்!

மன்னார், செப். 21

ஜனாதிபதி தேர்தலுக்காக வன்னி தேர்தல் மாவட்டத்தின் மன்னார் தேர்தல் தொகுதியின் சகல ஏற்பாடுகளும் சிறப்பான முறையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று மன்னார் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் க. கனகேஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், மன்னார் மாவட்டத்தில் 90 ஆயிரத்து 607 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். 98 வாக்களிப்பு நிலையங்களுக்கும் வாக்குப் பெட்டிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் நீதியாகவும், சுதந்திரமாகவும் நடை பெறுவதற்கு சகல ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பொலிஸார், அதிரடிப்படையினரும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

வாக்கு எண்ணும் நிலையமான மாவட்ட செயலக பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 64 பொலிஸாரும், 47 விசேட அதிரடிப் படையினரும் பாதுகாப்பு நடவடிக்கைக்காக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். முறைப்பாட்டு பிரிவுக்கு 11 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் 98 வாக்களிப்பு நிலையங்களிலும் 2 பொலிஸார் வீதம் பணிக்கு அமர்த்தப் பட்டுள்ளனர். வாக்களிப்பு நிறைவடைந்த நிலையில் வாக்குப் பெட்டிகள் பலத்த பாதுகாப்புடன் வாக்கு என்னும் நிலையத்திற்கு எடுத்து வரும் போது பொலிஸார் வீதியில் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

தேர்தல் வன்முறைகள் குறித்து எவ்வித முறைப்பாடுகளும் எமக்கு கிடைக்கவில்லை. சாதாரண சட்ட மீறல்களுடன் தொடர்புடைய 28 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றது. குறித்த முறைப்பாடுகளுக்கு உரிய தீர்வு வழங்கப் பட்டுள்ளது.

வாக்காளர்களில் விசேட தேவையுடைய வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு விசேட ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. கண் தெரியாதவர்கள் விசேட ஏற்பாடுகளுக்கு அமைய தங்களுக்கு தெரிந்த ஒருவரை அழைத்துச் சென்று வாக்களிக்க முடியும் - என்றார்.

# பேருந்துகளுக்கு தட்டுப்பாடு; பொதுமக்கள் பெரும் சிரமம்!

கொழும்பு, செப். 21

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்காகக் கொழும்பிலிருந்து தங்கள் சொந்த இடங்களுக்கு அதிகளவானோர் செல்வதால் பேருந்து நிலையங்களில் கடும் நெரிசல் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான மத்திய பேருந்து நிலையம், புறக்கோட்டை பேருந்து நிலையம், குணசிங்கபுர மற்றும் மாகும்புர பல்நிலை போக்குவரத்து நிலையம் உள்ளிட்ட பகுதிகளில் கடும் நெரிசல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

மேலதிக பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்துவதாக அதிகாரிகள் தெரிவித்தாலும், அவ்வாறான நிலை காணப்படவில்லை என்று பயணிகள் சாடினர்.

எனினும், தேர்தல் கடமைகளுக்காக 1,600 பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இதனால், பேருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் லலித் டி அல்விஸ், தெரிவித்தார்.

இஅதேநேரம், இன்றைய தினம் தனியார் பேருந்துகளுக்குத் தட்டுப்பாடு காணப்படும் எனத் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்துள்ளார். (ஐ)

# யாழ். தெரிவத்தாட்சி அலுவலர் வாக்குச் சாவடிகளில் ஆய்வு!

யாழ்ப்பாணம், செப். 21

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட வாக்குச் சாவடிகளை யாழ்ப்பாண மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் மருதலிங்கம் பிரதீபன் நேற்று பார்வையிடார்.

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் இன்று நடைபெறுகிறது. தேர்தலுக்காக யாழ் மாவட்ட வாக்கு எண்ணும் நிலையமான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலிருந்து இருந்து அனைத்து வாக்குச் சாவடிகளுக்குமான வாக்குப் பெட்டிகள் எடுத்து செல்லப்பட்ட நிலையில் வாக்குச் சாவடிகளை ஒழுங்கமைக்கும் பணிகள் நடைபெற்றன.

இதன்போது குறித்த பணிகளை பார்வையிட்டு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் நிலைமைகளை ஆராய்ந்தார். யாழ். மாவட்டத்தில் 511 வாக்களிப்பு நிலையங்களில் 4 இலட்சத்து 92 ஆயிரத்து 280 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ஐ)



# கசிப்பு, கோடாவுடன் சந்தேகநபர் கைது!

கொழும்பு, செப். 21

42 லீற்றர் கசிப்பு, 1049 லீற்றர் கோடாவுடன் சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மாத்தளை - கலேவெல பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். கைதானவர் தம்புள்ளை பிரதேசத்தை சேர்ந்தவராவார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கலேவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# தேர்தல் விடுமுறை வழங்காத நிறுவனங்கள் மீது நடவடிக்கை

கொழும்பு, செப். 21

இன்று நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலின்போது, அரச மற்றும் தனியார் துறைகளில் சேவையாற்றும் ஊழியர்களுக்கு விடுமுறை வழங்க தொழில் வழங்குநர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக் குழு அறிவுறுத்தியுள்ளது.

அவ்வாறு விடுமுறை வழங்காத நபர்களுக்கு எதிராக முறைப்பாடுகள் கிடைக்குமாயின், அவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கும் எனவும் அந்த ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

வேதனம் மற்றும் சொந்த விடு முறையை இழக்காத வகையில் வாக்கா ளர்களுக்கு, தமது வாக்கை அளிப்பதற்கு சந்தர்ப்பத்தை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அந்த ஆணைக் குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்களின் அலுவலர்க ளுக்கு, விசேட விடு முறை தொடர்பான தாபன விதிக்கோவையில், ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்குத் தொடர்ச்சி யாக 4 மணிநேரம் தேவை என்பதால் விசேட விடுமுறை வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

எனினும், தனியார்த்துறை ஊழியர்களுக்கு அவ்வாறான எழுத்து மூல கட்டளைகள் இன்மையால் மனித உரிமைகள் ஆணைக்குழு, தொழில் அமைச்சு மற்றும் தொழில் திணைக்களம் என்பன தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் கடந்த காலங்களில் ஏற்படுத்திய உடன்பாட்டுக்கு அமைய, இந்த தேர்தலிலும் அதனைக் கடைப்பிடிக்குமாறு தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதற்கமைய, தனியார் துறையில் பணியாற்றுபவர்கள் தங்களது சேவை நிலையத்திலிருந்து வாக்கெடுப்பு நிலையத்திற்குச் செல்ல வேண்டிய தூரம் 40 கிலோமீற்றர் அல்லது அதற்கு குறைவாகக் காணப்படுமாயின் அரைநாள் விடுமுறையும், 40 முதல் 100 கிலோமீற்றருக்கு இடைப்பட்ட தூரம் எனில் ஒருநாள் விடுமுறையும் வழங்கப்படல் வேண்டும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
21.09.2024 சனிக்கிழமை
குரோதி வருடம், புரட்டாதி 05

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# மக்கள் தீர்மானிக்கட்டும்!

இலங்கையில் அரசியல் தலைவிதியை தீர்மானிக்கும் தேர்தலில் எவர் வென்றாலும் அவருக்கான காலம் உப்பரிகையாக இருக்காது. மிகவும் கடினமான ஒன்றாகவே இருக்கும். ஒருவேளை கடினமான காலமாக இருந்தால் அதற்கான முழுப்பொறுப்பும் வாக்களித்த மக்களையே சாரும். பொதுவாக அரசியல்வாதிகளையே அனைவரும் குற்றஞ்சாட்டுவதுண்டு. ஆனால், வாக்களித்த மக்களை எவருமே திரும்பிப் பார்ப்பதில்லை.

அரசியல்வாதிகளின்மீது விரல் நீட்டிவிட்டு மக்கள் அமைதியாக இருந்துவிட முடியாது. ஒருவரை அல்லது ஒரு கட்சியை தெரிவு செய்த பின்னர் அவர்களின் தவறுகளை இயலாமையை மக்கள் தொடர்ந்தும் நோக்க வேண்டும். மக்களின் எதிர்பார்ப்புகள் ஈடேற வில்லையாயின், அடுத்த முறை அவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும். இவ்வாறான நடைமுறையை மக்கள் பின்பற்றுவார்களாயின், அரசியல்வாதிகள் தவறு செய்வதை பெருமளவுக்குத் தடுக்க முடியும். ஆனால், அவ்வாறு நிகழ்வதில்லை.

தமிழ் மக்கள் கடந்த காலத்தில் பலருக்கு வாக்களித்திருக்கின்றனர். வென்றவர்களும் தமிழ் மக்களை ஏமாற்றியிருக்கின்றனர். தோற்றவர்களும் ஏமாற்றியிருக்கின்றனர். இப்போது, தமிழ் மக்களுக்கு முன்னாலுள்ள தெரிவு எது? தமிழ் மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும். ஒருபுறம் நாட்டை மீட்டவர் என்னும் சுலோகத்துடன் ரணில் விக்கிரமசிங்க களத்தில் இருக்கின்றார். இன்னொருபுறம், எனக்கு ஒரு வாய்ப்பைத் தந்து பாருங்கள் - நான் செய்து காண்பிக்கிறேன் என்று சஜித் பிரேமதாஸ கூறுகிறார். மறுபுறம், இதுவரையில் ஆட்சி அதிகாரத்தை எட்டிக்கூட தொட முடியாமல் இருந்தவர்களான ஜே. வி. பியினருக்கு ஏன் ஒரு வாய்ப்பை தந்து பார்க்கக் கூடாது என்னும் கேள்வியுடன் அநுரகுமார திஸநாயக்க ஒரு தெரிவாக இருக்கின்றார். சிங்கள மக்கள் அநுரவை பற்றி அதிகம் சிந்திக்க வாய்ப்புள்ளதாகவே கணிப்புகள் கூறுகின்றன. ஏனெனில், கோட்டாபயவால் ஏமாற்றத்துக்கு உள்ளான சிங்கள மக்கள் இன்னொரு சிங்களத் தலைவரை தேடிக் கொண்டிருக்கின்றனர்.

இந்தப் பின்புலத்தில்தான் வரலாற்றில் முதன்முறையாக, ஒரு தமிழ்ப் பொது வேட்பாளர், தமிழ் மக்களின் முன்னால் ஒரு தெரிவாக இருக்கின்றார். தமிழ் மக்கள் எவ்வாறானதொரு வரலாற்று முடிவை எடுக்கப் போகின்றனர்? தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பினர் முடிந்தளவு பிரசாரங்களை முன்னெடுத்திருக்கின்றனர். வழமையாக ஜனாதிபதித் தேர்தலின்போது, மேற்கொள்ளப்படாதளவுக்கு பிரசாரங்களை முன்னெடுத்திருக்கின்றனர்.

யுத்தத்துக்குப் பின்னரான கடந்த பதினைந்து வருடங்களில் ஏற்படாதளவுக்கு தமிழ்த் தேசிய செயல்பாடுகள் ஒன்றிணைந்த வகையில் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. இதற்கும் மேல் செய்வதற்கு எதுவுமில்லை என்னுமளவுக்கு பலவாறான செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் செயல்பாடுகளை மக்கள் எவ்வாறு புரிந்து கொண்டிருக்கின்றனர்? மக்கள் எவ்வாறு சிந்திக்க முற்படுகின்றனர்? மக்களின் எதிர்பார்ப்புகளை எவ்வாறு புரிந்து கொள்வது? மக்கள் எதனை நோக்கிச் செல்ல விரும்புகின்றனர்? மக்களின் வாக்குகள்தான் மேற்படி கேள்விகள் அனைத்துக்குமான பதிலாகும்.

மக்களின் மனோநிலையை அறிந்து கொள்வதற்கு தேர்தல் ஒன்றுதான் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரேயொரு வழிமுறையாக இருக்கின்றது. தேர்தல் பெறுபேறுகள்தான் மக்களின் தீர்ப்பை அளவிடுவதற்கு இருக்கின்றன ஆகச் சிறந்த கருவியாகும். நாளைய தினம், பெருமளவுக்கு அந்தத் தீர்ப்பை நாம் அறிந்திருப்போம்.

# ஊசி மருந்து ஒவ்வாமையால் வயோதிபர் உயிரிழந்த சம்பவம் குறித்து விசாரணை

கொழும்பு, செப். 21

தங்காலை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட வயோதிபர் ஒருவர் வைத்தியசாலையில் செலுத்தப்பட்ட ஊசி மூலம் செலுத்தப்பட்ட மருந்து ஒவ்வாமை காரணமாக உயிரிழந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தங்காலை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி அவந்தி ரூப்பசிங்க தெரிவித்தார்.

கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு தலையில் பலத்த காயங்களுடன் தங்காலை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 63 வயதுடைய வயோதிபர் ஒருவர் வைத்தியசாலையில் ஊசி மூலம் செலுத்தப்பட்ட மருந்து ஒவ்வாமை காரணமாகக் கடந்த 17 ஆம் திகதி உயிரிழந்திருந்தார்.

உயிரிழந்தவரது சடலம் பிரேதப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு பின்னர் மேலதிக பரிசோதனைக்காக இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த ஊசி மூலம் செலுத்தப்பட்ட மருந்து காரணமாக குறித்த வைத்தியசாலையில் இதுவரை நான்கு பேர் உயிரிழந்துள்ளதாகவும் இந்த ஊசி மூலம் செலுத்தப்பட்ட மருந்து தொடர்பில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தலைவர் விசேட வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்துள்ளார்.

இந்த ஊசி மூலம் செலுத்தப்பட்ட மருந்துகளை வைத்தியசாலைகளில் பயன்படுத்துவதற்கு தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை தடை விதித்துள்ளது. (அ)

# விபத்தில் மூதாட்டி பலி

கொழும்பு, செப். 21

ஜீப் வாகனம் மோதியதில் வயோதிப பெண் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் இரவு இந்த விபத்து அத்துருகிரியவில் இடம்பெற்றுள்ளது.

இதில், அதே இடத்தைச் சேர்ந்த 74 வயதுடைய வயோதிபப் பெண்ணே உயிரிழந்தார்.

பெண்ணின் சடலம் அத்துருகிரிய மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# இன்று வழமைபோல் ரயில் சேவை

கொழும்பு, செப். 21

இன்று வழமை போன்று ரயில் சேவைகள் இடம் பெறும் எனத் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துரைத்த ரயில்வே திணைக்களத்தின் பிரதி பொது முகாமையாளர் என். ஜே.இந்திபொலகே இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

இதற்கமைய வழமை போன்று சகல மார்க் கங்களிலும் ரயில் சேவைகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# பஸ் விபத்தில் 17 பேர் காயம்

கொழும்பு, செப். 21

மொனராகலை, கும்புக்கன் 14 மைல்கல் அருகில் இடம்பெற்ற விபத்தில் 17 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று வெள்ளிக்கிழமை இடம் பெற்றுள்ளது.

மொனராகலையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது, பஸ்ஸில் பயணித்த 17 பேர் காயமடைந்துள்ள நிலையில் மொனராகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ)

# கண்டிக்கு விஜயம் செய்த தேர்தல் கண்காணிப்பு குழு



கொழும்பு, செப். 21

கண்டிக்கு விஜயம் செய்த ஐரோப்பிய ஒன்றிய ஜனாதிபதி தேர்தல் கண்காணிப்பு குழுவினர் அரசாங்க உத்தியோகத்தர்கள் சிறப்பாக தேர்தல் கடமைகளில் ஈடுபட்டு சேவையாற்றுவதாக தெரிவித்துள்ளனர்.

இரு குழுவினராக கண்டிக்கு விஜயம் செய்து கண்டி மாவட்டத்தில் பல இடங்களையும் பார்வையிட்டதன் பின் மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யூ கமகேயை அளுநர் அலுவலகத்தில் சந்தித்த போதே ஜனாதிபதி தேர்தல் தொடர்பான கருத்தினை தெரிவித்துள்ளனர்.

இக்குழுவில் ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் சென்செஸ் ஆமர் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் கெரமன் மெரினோ ஆகியோரும் விஜயம் செய்திருந்தனர். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தேவையற்ற விஷயங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும். விழிப்புணர்வு தேவைப்படும்.

**இடபம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னை வரக்கூடும். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**மிதுனம்**
உங்கள் இலக்குகளை நோக்கி முன்னேறுவீர்கள். புது பொருள் வந்து சேரும். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உங்கள் கை ஓங்கும். திட்டங்கள் நிறைவேறும்.

**கடகம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக் கொடுப்பீர்கள். உத்தியோகத்தில் சகஊழியர்கள் பாராட்டுவார்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். அலுவலகத்தில் மரியாதைக் கூடும்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் இனந்தெரியாத சின்னச் சின்ன கவலைகள் வந்து போகும். நன்றி மறந்த ஒருவரை நினைத்து வருத்தப்படுவீர்கள். வியாபாரத்தில் பாக்கிகளை வசூலிப்பதில் தாமதம்.

**துலாம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். தாயார் ஆதரித்து பேசுவார். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. புது சலுகைகள் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

**விருட்சிகம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர்கள், நண்பர்கள் உங்களை ஆலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். அமோகமான நாள்.

**தனுசு**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வியாபாரத்தில் புது தொடர்புகள் கிடைக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**மகரம்**
எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். நன்மை கிட்டும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். உங்களின் ஆலோசனைகள் ஏற்கப்படும். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. தைரியும்

**மீனம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். தோற்றப்பொலிவு கூடும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்

# தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநாடு ஒக்ரோபர் 27இல்

## அறிவித்தார் நடிகர் விஜய்



சென்னை, செப். 21

தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநாடு விக்கிரவாண்டியில் ஒக்ரோபர் 27ஆம் திகதி நடைபெறும் என்று அந்தக் கழகத்தின் தலைவர் விஜய் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில்,

"தமிழக வெற்றிக் கழகத்தின் கொடி அறிமுகப்படுத்திய நாள் முதல், நம் கழகத் தோழர்களின் எண்ணங்களுக்கு ஏற்பவும் தமிழ்நாட்டு மக்களின் பேரன்புடனும் பேராதரவுடனும் நமது அரசியல் வெற்றிக்கான களம் விரிவடைந்து கொண்டே வருகிறது.

நமது மக்களின் பெரும் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில், தமிழக அரசியல் களத்தில் புதிய நம்பிக்கையை விதைக்கக்கூடிய நமது கழகத்தின் கொள்கைத் தலைவர்கள், கொள்கைகள் மற்றும் கொள்கை சார்ந்த செயல் திட்டங்களைப் பிரகடனப்படுத்தும் தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநில மாநாடு, வருகின்ற ஒக்ரோபர் 27ஆம் திகதி மாலை 4 மணியளவில் விழுப்புரம் மாவட்டம். விக்கிரவாண்டி அருகே உள்ள வி.சாலை கிராமத்தில் நடைபெவுள்ளது என்பதைப் பெருமகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது வெற்றிக் கொள்கை மாநாடு, நம்மை வழிநடத்தப் போகும் கொள்கைகளையும் நாம் அடையப் போகும் இலக்குகளையும் முழங்கும் அரசியல் திருவிழாவாகவும் பெருவிழாவாகவும் கொண்டாடப்படவுள்ளது. தமிழக மக்களின் மனங்களைத் தீர்க்கமாக வெல்லும் நோக்கில் அமையவுள்ள மாநாட்டிற்கான ஆயத்தப் பணிகள் ஏற்கெனவே நடந்துவரும் நிலையில், அதற்கான களப்பணிகளும் தொடங்கப்படவுள்ளன என்பதையும் உங்களிடம் பகிர்ந்து கொள்கிறேன்.

இந்த மாநாட்டில் இருந்து வலிமையான அரசியல் பெரும் பாதையை அமைப்போம். இந்நிலையில், நமது முதல் மாநில மாநாட்டை எல்லா வகையிலும் வெற்றிகரமாக நடத்துவதற்காக. தமிழ்நாட்டு மண்ணைச் சேர்ந்த மகனாக ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் ஆதரவையும் ஆசிகளையும் உரிமையுடன் வேண்டுகிறேன். விரைவில் சந்திப்போம். வாகை சூடுவோம்" என்று விஜய் தெரிவித்துள்ளார்.

தமிழக வெற்றிக் கழகம் என்ற கட்சியை தொடங்கிய நடிகர் விஜய், கடந்த மாதம் 22ஆம் திகதி கட்சியின் கொடி, பாடலை அறிமுகம் செய்தார். கட்சியின் முதல் மாநாட்டை 23ஆம் திகதி நடத்தத் திட்டமிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# உதயநிதிக்கு உரியநேரத்தில் துணை முதல்வர் பொறுப்பு!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான்

கோவை, செப். 21

தமிழகம் முழுவதும் இளைஞர்களை ஒன்று சேர்த்து கழகத்தை வலுப்படுத்துகிறார். அந்த உழைப்புக்கு ஏற்றவாறு உரிய நேரத்தில் கருணாநிதியைப் போல முதல்வர் ஸ்டாலினும் உதயநிதிக்கு துணை முதல்வர் பொறுப்பு கொடுப்பார் என்று தமிழக சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்துள்ளார்.

பேரூர் ஆதீனத்தை சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒட்டுமொத்த தமிழ் உணர்வோடு இருக்கக்கூடிய அனைவரையும் ஒருங்கிணைப்பதுதான் தமிழர் கலாசாரம். மத்திய அரசு கொண்டு வரும் வக்பு வாரிய சட்டத்திருத்த மசோதவை ஆரம்பித்திலிருந்து எதிர்த்து வருகிறோம்.

முன்னாள் முதல்வர் கருணாநிதி உரிய நேரத்தில் உள்ளாட்சித் துறையயும் துணை முதல்வர் பதவியையும் ஸ்டாலினுக்கு வழங்கினார். உழைப்பு என்றால் அது ஸ்டாலின்தான் என்று அவர் கூறினார். அதேபோல், அந்த உழைப்புக்கு எடுத்துக் காட்டாக ஒட்டுமொத்த தமிழ் சமுதாயத்தின் செல்லபிள்ளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இன்று தமிழகம் முழுவதும் இளைஞர்களை ஒன்று சேர்த்து கழகத்தை வலுப்படுத்துகிறார். அந்த உழைப்புக்கு ஏற்றவாறு உரிய நேரத்தில் கருணாநிதியைப் போல முதல்வர் ஸ்டாலினும் உதயநிதிக்கு துணை முதல்வர் பொறுப்பு கொடுப்பார்" - என்றார்.

(ஐ)

# இந்தியா ஒரே நாடல்ல;

## நாம் தமிழர் சீமான்



இராமநாதபுரம், செப். 21

"ஒரே நாடு, ஒரே தேர்தல் என்பதில் எனக்கு உடன்பாடில்லை. இந்தியா ஒரே நாடல்ல. பல மொழி, பல கலாசாரம் என பன்முகைத்தன்மை கொண்ட நாடு. பாராளுமன்றம், சட்டப் பேரவைக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது சாத்தியமற்றது" என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

"தி. மு. கவில் கொத்தடிமையாக ஒரு கூட்டத்தை உருவாக்கி வைத்துள்ளனர். அதில் மூத்தவர்களே உதயநிதியை துணை முதல்வராக வேண்டும் என சொல்ல வைக்கின்றனர். யார் மதுவை ஒழிப்பார்களோ அவர்களுடன் திருமாவளவன் கூட்டணி வைத்திருந்தால் அது சரியாக இருந்திருக்கும். அப்படியில்லாமல் அந்தக் கூட்டணியில் அவர் சிக்கிக் கொண்டார். ஆனால், அவரது மது ஒழிப்பு நோக்கத்தை விமர்சிக்க முடியாது.

ஆட்சியில் பங்கு கேட்பது தவறில்லை. விடுதலை சிறுத்தைகள், கம்யூனிஸ்ட் கட்சிகள், ம. தி. மு. க , இஸ்லாமிய அமைப்புகளின் வாக்குகள் இல்லாமலா தி. மு. க. வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தது? எல்லோருடைய வாக்குகள் வேண்டும், ஆனால், அதிகாரத்தில் மட்டும் பங்கு கொடுக்க மறுக்கின்றனர். தி. மு. க. மட்டும் மத்திய கூட்டணியில் ஆட்சியில் பங்கு கேட்கிறது. மத்திய கூட்டணி ஆட்சியில் 18 ஆண்டுகள் தி. மு. க. பதவி வகித்துள்ளது.

தி. மு. க., அ. தி. மு. கவுக்கு விவசாயி பற்றியோ, விவசாயத்தைப் பற்றியோ அருமை தெரிவதில்லை. அரசுக்கு தெரியாமலா பொலிஸ் போதைப் பொருட்களை விற்க அனுமதிக்கிறது? அரசுதான் போதைப்பொருள் விற்க அனுமதிக்கிறது.

கச்சதீவை முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி, தான்தோன்றித் தனமாக இலங்கைக்கு தாரை வார்த்தார். ஆனால், அப்போதைய இராமநாதபுரம் எம். பியான மூக்கையா தேவர் மட்டுமே பாராளுமன்றத்தில் அதற்கு கண்டனம் தெரிவித்தார். அப்போது ஆட்சியில் இருந்த தி. மு. க . ஒரு போராாட்டம்கூட நடத்தவில்லை. ஒருமுறை எங்களிடம் ஆட்சியை கொடுத்துப்பாருங்கள். என் மீனவரை யாரும் தொட்டுவிடமுடியுமா?

ஒரே நாடு, ஒரே தேர்தல் என் பதில் எனக்கு உடன்பாடில்லை. இந்தியா ஒரே நாடல்ல. பல மொழி, பல கலாசாரம் என பன்முகைத்தன்மை கொண்ட நாடு. ஏன் வடமாநிலங்களில் பல கட்டங்களாக தேர்தல் நடத்துகின்றனர்? தேசியத்தை, தேசிய ஒருமைப்பாட்டை பற்றி பேச பா. ஜ. கவுக்கு தகுதியில்லை - என்றார்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5ஆயிரத்தை தாண்டிய தேர்தல் விதிமீறல்கள்!

கொழும்பு, செப். 21

**ஜனாதிபதி தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுக ளின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.**

கடந்த 24 மணி நேரத்தில் ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய 269 முறைப்பா டுகள் தேர்தல் ஆணைக்குழு வுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில், ஜூலை 31ஆம் திகதியில் இருந்து செப் ரெம்பர் 20 ஆம் திகதி வரை 5, 214 ஆக அதிகரித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரி வித்துள்ளது.

இதில் 1,656 முறைப்பாடு கள் தேசிய தேர்தல் முறைப் பாட்டு முகாமைத்துவ நிலையத் துக்கும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 3,415 முறைப்பா டுகளும் கிடைத்துள்ளன.

இந்தக் காலப்பகுதியில் தேர் தல் வன்முறைகள் தொடர்பில் 34 முறைப்பாடுகள் பதிவு செய் யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இதுவரை தங்களது கிடைக்கப்பெற்ற ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய 4,680 முறைப் பாடுகள் தொடர்பில் தீர்வு கண் டுள்ளதாக தேர்தல் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

எஞ்சிய 534 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக் கப்பட்டு வருவதாகவும் ஆணைக் குழு அறிவித்துள்ளது. (அ)

## இலங்கை போக்குவரத்துச் சபையின் சேவைகள் மட்டுப்படுத்திய அளவில்!

கொழும்பு, செப். 21

பயணிகள் போக்குவரத்துக் காக இணைத்துக் கொள்ளப்ப டும் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இடம்பெறும் என அதன் தலைவர் லலித் டி அல்விஸ் தெரிவித்தார்.

தேர்தல் கடமைகளுக்காக அரச பஸ்கள் ஈடுபடுத்தப்படு கின்றமையே இதற்கான காரணம் என அவர் குறிப்பிட்டார்.

தேர்தல் கடமைகளுக்காக 1600 இற்கும் மேற்பட்ட பஸ் கள் சேவையில் ஈடுபடுத்தப்பட வுள்ளதாக இலங்கை போக்குவ ரத்துச் சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், சொந்த கிராமங்களை நோக்கிச் செல்ப வர்களுக்கான பஸ் சேவைகள் உரிய வகையில் இடம்பெற வில்லை எனப் பயணிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தங்களது பயணத்திற்காகப் பல மணி நேரங்கள் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ள தாக அவர்கள் குறிப்பிட்டுள்ள னர்.

இந்த விடயம் தொடர்பில் ஏ தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் தொழிற்பாட்டுப் பணிப் பாளர் ஷெரின் அத்துக்கோர ளவை தொடர்பு கொண்டு கேட்டபோது,

அதற்குப் பதிலளித்த அவர், வாக்களிப்புக்காகக் கிராமங் களை நோக்கிப் பயணிக்கவுள்ள மக்களுக்காக மேலதிக பஸ்க ளைச் சேவையில் இணைக்கவுள் ளதாகக் குறிப்பிட்டார். (அ)

## நிதி மோசடி குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்தவர் கைது!

கொழும்பு, செப். 21

நிதி மோசடி செய்த குற்றச் சாட்டில் தேடப்பட்டு வந்த சந்தேகநபர் ஒருவர் டுபாயில் இருந்து இலங்கை வந்த பின்னர் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய வளா கத்தில் வைத்து கைது செய்யப் பட்டார்.

நிதி மோசடி வழக்கில் தொடர் புடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கண்டியில் வசிக்கும் 32 வய துடைய சந்தேக நபர் நிறுவனம் ஒன்றில் விற்பனைப் பிரதிநிதி யாக பணியாற்றிய காலத்தில் 10.8 மில்லியன் ரூபாய்க்கு மேல் மோசடி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (அ)

## விடுதியொன்றில் போதைப்பொருள் பொதி செய்த இளம் ஜோடி சிக்கியது!

கொழும்பு, செப். 21

பெலும்மஹர வெலிவேரிய வீதி பகுதியிலுள்ள விடுதியொன் றின் அறையொன்றில் போதைப் பொருளை பொதி செய்து கொண்டிருந்த இளம் ஜோடி கைது செய்யப்பட்டுள்ளதாக யக்கல பொலிஸார் தெரிவித்த னர்.

சந்தேக நபர்கள் தங்கியிருந்த அறையை சோதனையிட்ட போது சந்தேக நபரிடம் 26 கிராம் 250 மில்லி கிராம் போதைப்பொ ருள் இருந்ததாகவும், யுவதியிடம் 3500 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள் இருந்ததாகவும் பொலி ஸார் தெரிவித்தனர்.

அம்பகஸ்பிட்டிய, கந்தமுல்ல பிரதேசத்தில் வசிக்கும் 32 வய துடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் ஹிரியால பொலி ஸாரினால் இதற்கு முன்னர் போதைப்பொருள் குற்றச்சாட் டில் நீதிமன்றில் முற்படுத்தப் பட்டார். (அ)

## சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட கிருமிநாசினிகள் புத்தளத்தில் மீட்பு!

கொழும்பு, செப். 21

புத்தளம் - உச்சமுனை தீவுப் பகுதியில் இருந்து சட்டவிரோ தமாக கொண்டுவரப்பட்ட கிருமி நாசினிகள் கடற்படையி னரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

வடமேற்கு கடற்படை கட் டளையின் விஜய கடற்படையி னர் குறித்த தீவுப் பகுதியில் சந் தேகத்திற்கிடமான முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிங்கி இயந்திரப் படகு ஒன் றைச் சோதனை செய்துள்ளனர்.

இதன்போது குறித்த டிங்கி இயந்திரப் படகில் 11 உரமூடை களில் அடைக்கப்பட்ட நிலை யில் பெரும் எண்ணிக்கையி லான கிருமி நாசினிகள் இருந் துள்ளமை கண்டறியப்பட்டுள் ளது.



குறித்த கிருமி நாசினிகள் சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக எடுத்து வரப் பட்டு, இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் விற்பனை செய் யும் நோக்கில் பதுக்கி வைக்கப் பட்டிருக்கலாம் என தாம் சந்தே கிப்பதாக கடற்படையினர் குறிப்பிட்டனர்.

அத்துடன், குறித்த டிங்கி இயந்திரப் படகில் இருந்த இருவர் சந்தேகத்தின் பெயரில் கடற்படையினரால் கைது செய் யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப் பட்ட சந்தேக நபர்கள் இருவ ரும், கைப்பற்றப்பட்ட கிருமி நாசினிகளுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டு நாயக்க சுங்க திணைக்கள அதி காரிகளிடம் ஒப்படைக்கப்பட் டன என கடற்படையினர் மேலும் குறிப்பிட்டனர். (அ)

## தேர்தல் கடமைகளுக்காக நியமனக்கடிதங்கள் பெற்ற உத்தியோகத்தர்கள் பணிக்குச் சமுகமளிக்கவேண்டும்

கொழும்பு, செப். 21

தேர்தல் கடமைகளுக்காக நியமனக்கடிதங்களை பெற்ற அனைத்து உத்தியோகத்தர்க ளும் பணிக்குச் சமுகமளிக்க வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க குறிப்பிட்டார்.

தேர்தல் தினத்தன்று குறித்த நியமனக் கடிதங்களை மாற்றுவ தும் இரத்து செய்வதும் தண்ட



னைக்குரிய குற்றம் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், உத்தியோ கபூர்வ வாக்காளர் அட்டைக ளைப் பெறாத வாக்காளர்கள் உரிய அஞ்சல் அலுவலகங்களி லிருந்து பெற்றுக்கொள்ள முடி யும். தேவைப்படும் பட்சத்தில் தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்த ளப் பக்கத்தில் வாக்காளர் அட் டைகளைப் பதிவிறக்கம் செய் துகொள்ள முடியும் எனத் தேர் தல்கள் ஆணைக்குழு தெரிவித் துள்ளது. (அ)

## அதிவேக நெடுஞ்சாலையில் 2 ரயர்கள் வெடித்து விபத்துக்குள்ளான பாரவூர்தி!

கொழும்பு, செப். 21

தெற்கு அதிவேக நெடுஞ்சா லையில் பாரவூர்தியொன்று வீதியின் நடுவே கவிழ்ந்து விபத் துக்குள்ளாகியுள்ளதாக பொலி ஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து பின்னதுவைக் கும் பத்தேகமவுக்குமிடையில் இடம்பெற்றுள்ளது.

வாகனத்தின் பின்னாலுள்ள இரண்டு ரயர்கள் வெடித்த நிலையில், சாரதியால் வாகனத் தைக் கட்டுப்படுத்த முடியாமல் போனமையால் இந்த பாரவூர்தி கவிழ்ந்து விபத்துக்குள்ளான தாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, கொழும்பு நோக்கிச் செல்லும் இரண்டு பாதைகளில் ஒரு பாதை தடைப் பட்டதுடன், மற்றொரு பாதை யில் வாகனப் போக்குவரத்து நடைபெற்றதாகவும் விபத்தில் உயிர்ச்சேதம் எதுவும் பதிவாக வில்லை எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ)

## வாக்காளர் அட்டைகளை விநியோகிக்காது வைத்திருந்த தபால் அலுவலர் பணி நீக்கம்!

கொழும்பு, செப். 21

களுத்துறையில் 900 வாக்கா ளர் அட்டைகளை விநியோகிக் காமல் வைத்திருந்த தபால் உத்தி யோகத்தரை உடனடியாக பணி இடைநிறுத்துமாறு தபால் மா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார்.

களுத்துறையில் பயாகல, அயகம கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்குட்பட்ட மக்களுக்கு வழங்கப்படவேண்டிய உத்தி யோகபூர்வ வாக்காளர் அட்டை களை விநியோகிக்காமல் வைத் திருந்தவரே இவ்வாறு பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இது குறித்து பிரதேச மக்க ளால் வழங்கப்பட்ட முறைப்பா டுகளுக்கு அமையவே குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள் ளது.

குறித்த தபால் உத்தியோகத் தர் 11 நாட்களுக்கு மேலாக விநி யோகிக்காமல் வைத்திருந்த தபால் அட்டைகளும் மீட்கப் பட்டுள்ளன.

மீட்கப்பட்ட வாக்காளர் அட்டைகள் களுத்துறை பிரதான தபால் நிலையத்திலிருந்து பயா கல உப தபால் நிலையத்திற்கு கிடைக்கப்பெற்றதாகவும் விருப் பமுள்ளவர்கள் தபால் நிலையத் திற்கு வந்து பெற்றுக்கொள்ள லாம் என்றும் அறிவிக்கப்பட் டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் 10 வைத்தியசாலைகளுக்கு ஜேர்மனியில் இருந்து நன்கொடைகள்

## வவுனியாவில் வைத்து வழங்கல்



வவுனியா, செப். 21

**வடக்கு மாகாணத்திலுள்ள பத்து வைத்தியசாலைகளின் அவசர சிகிச்சை பிரிவுக்கான அதிநவீன படுக்கைகள் உள்ளிட்ட நன்கொடைகள் ஜேர்மன் நன்கொடையாளர் ஒருவரால் வழங்கப்பட்டுள்ளன.**

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸிடம் இந்த நன்கொடைப் பொருட்கள் கையளிக்கப்பட்டன.

இதற்கான நிகழ்வு வவுனியா பொது வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் நேற்று முன் தினம் மாலை நடைபெற்றது.

ஸ்ரீ சக்தி ஆன்மீக இந்து அமைப்பின் ஊடாக சர்வதேச இந்து கலாசார ஆலோசகரான கலாநிதி இரத்னசாமி இராமேஸ்வரன் என்பவரால் ஜேர்மன் நாட்டிலிருந்து பெறப்பட்ட இந்த நன்கொடைகள் இலங்கையின் பல பாகங்களில் பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

அதன் ஒரு கட்டமாக வடக்கு மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளின் அவசர சிகிச்சை பிரிவிற்கான அதிநவீன படுக்கைகள் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்கள் நன்கொடையாக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. (அ)

# போக்குவரத்து வசதிகள் இல்லை

கொழும்பு, செப். 21

மாகும்பர பல்நோக்கு போக்குவரத்து மத்திய நிலையத்தின் ஊடாக தொலைதூர ஊர்களுக்கு வாக்களிக்கும் நோக்கில் செல்லும் ஆயிரக்கணக்கான மக்கள் போதிய பஸ்கள் இல்லாததால் கடும் சிரமத்திற்கு உள்ளாகினர்.

குறிப்பிட்ட கால அட்டவணைப்படி பஸ்கள் இயக்கப்பட்டாலும், அதிக அளவில் மக்கள் வருவதால், போதிய பஸ்கள் இல்லாததால், சன நெரிசல் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

சில பயணிகள் மணிக்கணக்கில் வரிசையில் காத்திருப்பதைக் காணமுடிந்ததுடன், மொனராகலை, அம்பாறை, எம்பிலிப்பிட்டிய, பதுளை, கதிர்காமம் போன்ற தொலைதூரப் பகுதிகளுக்குச் செல்லும் பஸ்களில் கடும் தாமதம் ஏற்பட்டது. (அ)

# 15 வயது மாணவன் மாயம்

கொழும்பு, செப். 21

இரத்தினபுரி - கஹவத்தை - ஒப்பவத்தை பகுதியைச் சேர்ந்த 15 வயதுடைய மாணவனொருவர் காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜி.விஜயகுமார் மற்றம் ரஞ்சிதமலர் ஆகியோரின் மகனான குறித்த மாணவன் (வி.பிரவின்) கடந்த 16ஆம் திகதி காலை 06.30 மணியளவில் காணாமல் போனதாக பொலிஸில் முறைப்பாடொன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

காணாமல் போன சந்தர்ப்பத்தில் குறித்த மாணவன், வெள்ளைநிற சட்டை அணிந்திருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் குறித்த மாணவன் தொடர்பில் விபரம் தெரிந்தால் 0759523250, 0768672252, 0721006689 ஆகிய இலங்கங்களுக்கு தொடர்பை ஏற்படுத்துமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# யாழில் வழிப்பறியில் ஈடுபட்ட தம்பதியினர் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், செப். 21

யாழ்ப்பாணத்தில் வழிப்பறி கொள்ளையில் ஈடுபட்ட தம்பதியினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சங்கானை வைத்தியசாலை வீதியில், துவிச்சக்கர வண்டியில் சென்றுகொண்டிருந்த பெண்ணொருவரின் சங்கிலியை, மோட்டார் சைக்கிளில் வந்த தம்பதியினர் அறுத்துக்கொண்டு தப்பி ஓட முயன்றவேளை ஊரவர்கள் மடக்கி பிடித்து மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

பொலிஸார் அவர்களை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்தவேளை கணவன் - மனைவி இருவரும் சுன்னாகம் பகுதியிலும் கடந்த வாரம் நபர் ஒருவருடைய சங்கிலியை அறுத்ததாகவும், அதனை யாழ். நகர் பகுதியில் உள்ள நகைக்கடை ஒன்றில் அடகு வைத்துள்ளதாகவும் தெரிவித்துள்னர்.

விசாரணைகளின் பின்னர் இருவரையும் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்திய வேளை இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது. (அ)

# விசாரணை முடியும் வரை புலமைப்பரிசில் விடைத்தாள்களை திருத்தும் பணி நிறுத்தம்

## கல்வி அமைச்சின் செயலாளர் விளக்கம்

கொழும்பு, செப். 21

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை மீண்டும் நடத்தலாமா வேண்டாமா என்பது குறித்து குற்றப்புலனாய்வு திணைக்களம் மற்றும் பரீட்சைகள் திணைக்களத்தின் விசாரணைகள் முடிந்த பின்னர் அவர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் முடிவெடுக்கப்படும் என கல்வி அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர ஊடகங்களுக்கு அறிவித்துள்ளார்.



நேற்று இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பரீட்சைகள் திணைக்களத்தின் விசாரணைகள் முடியும் வரை பரீட்சை விடைத்தாள் திருத்தம் எதுவும் இடம்பெறாது எனவும் சுட்டிக் காட்டினார்.

மேலும் குற்றம் நிரூபிக்கப்படும் பட்சத்தில் மேற்படி பரீட்சை மீண்டும் நடத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# காலி தேசிய வைத்தியசாலையில் 72 வைத்தியர்களுக்கு பற்றாக்குறை

## பாதிக்கப்படும் நோயாளர்கள்

கொழும்பு, செப். 21

தென் மாகாணத்தில் காணப்படக்கூடிய பிரதானமான வைத்தியசாலையான காலி-கராப்பிடிய தேசிய வைத்தியசாலையில் 2023ஆம் ஆண்டு மற்றும் 2024ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் பணிபுரிந்து வந்த 12 விசேட வைத்தியர்கள், 60 சாதாரண வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் உள்ளிட்ட வைத்தியசாலை ஊழியர்கள் சுமார் 100 பேர் தமது பணியிலிருந்து நீங்கியுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு பணியிலிருந்து நீங்கியுள்ள விசேட வைத்தியர்கள் அனைவரும் வெளிநாடுகளில் வைத்திய சேவைக்காக சென்றுள்ள நிலையில் கராப்பிட்டிய தேசிய வைத்தியசாலையில் சேவை புரியும் 60 சாதாரண வைத்தியர்கள் சேவையிலிருந்து விலகி வெளிநாடுகளில் வைத்திய சேவை புரிந்து வருகின்றமை தெரியவந்துள்ளது.

இதேவேளை, கராப்பிட்டிய வைத்தியசாலையில் தாதியர் குழுவில் அதிகளவானோர் மற்றும் வைத்தியசாலை குழுவினர் 100 பேருக்கும் அதிகமானோர் 2023ஆம் ஆண்டில் தமது பணியிலிருந்து விலகிய நிலையில் அவர்களுள் பலர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் இவ்வாறு நிலவி வரும் வைத்தியர் பற்றாக்குறை காரணமாக வைத்தியசாலை பணிகளை நடத்தி வருவதில் பல சிரமங்கள் ஏற்பட்டுள்ளதுடன் இதனால் நோயாளர்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டது.

# நோயாளர்களிடம் குறிப்பிட்ட கட்சிக்கு வாக்களிக்க கோரிய தாதி பணி நீக்கம்

கொழும்பு, செப். 21

ஹொரணை ஆதார வைத்தியசாலையில் நோயாளர்களுக்கு ஆலோசனை வழங்கும்போது குறிப்பிட்ட அரசியல் கட்சிக்கு வாக்களிக்குமாறு நோயாளர்களிடம் கூறிய தாதி ஒருவர் அந்த நடவடிக்கைகளில் இருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டதாக களுத்துறை மாவட்ட தேர்தல் சர்ச்சை தீர்வு மையம் தெரிவித்துள்ளது.

ஹொரணை ஆதார வைத்தியசாலையின் உதவித் தெரிவு அதிகாரி ஷானக திரிமான்னவின் பணிப்புரையின் பேரில், குறித்த தாதி மீது செய்த முறைப்பாட்டின் பிரகாரம் மருத்துவப் பணிப்பாளர் மற்றும் ஹொரணை தலைமையக பொலிஸாருக்கு தொலைபேசியில் அறிவித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக அந்த நிலையத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அதன்படி, சம்பந்தப்பட்ட தாதியை அலுவலகத்திற்கு வரவழைத்து, அது தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடாமல் இருக்குமாறு எச்சரித்து, ஆலோசனை நடவடிக்கைகளில் இருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டதாக மாவட்ட நிர்வாக அதிகாரி சம்பத் உடுமுல்ல, உதவித் தேர்வு அலுவலர் ஷானக திரிமான்னவுக்கு எழுத்து மூலம் அறிவித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ரயிலில் மோதுண்டு ஒருவர் பலி!

கொழும்பு, செப். 21

களுத்துறை வடக்கு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வஸ்கடுவ பிரதேசத்தில் ரயிலில் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளதாக களுத்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன் தினம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

களுத்துறை, வஸ்கடுவ பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதுடைய நபரொருவரே உயிரிழந்துள்ளார்.

இவர் கொழும்பிலிருந்து பெலியத்த நோக்கிப் பயணித்த ரயிலில் மோதுண்டே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரது சடலம் நாகொடை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# சிறுவர் காப்பகத்தில் இரு சிறுமிகள் மாயம்!

கொழும்பு, செப். 21

மொனராகலை பிரதேசத்தில் உள்ள சிறுவர் காப்பகம் ஒன்றிலிருந்த இரண்டு சிறுமிகள் காணாமல் போயுள்ளதாக மொனராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

14 மற்றும் 15 வயதுடைய இரண்டு சிறுமிகளே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

இந்த சிறுமிகள் இருவரும் நேற்று முன் தினம் வியாழக்கிழமை காலை பாடசாலைக்கு சென்றுள்ள நிலையில் மீண்டும் சிறுவர் காப்பகத்திற்கு திரும்பவில்லை என பொலிஸருக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மொனராகலை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் முடிவை மதிக்கவேண்டும்!

## வாக்களிப்புக்கு முன் கரு ஜெயசூரிய கோரிக்கை

கொழும்பு, செப். 21

**மக்களின் முடிவுகளை மதிக்கும் பொறுப்புணர்வுள்ள அரசியல் தலைமைத்துவத்தை ஜனாதிபதி வேட்பாளர்களும் அரசியல் கட்சியின் தலைவர்களும் வெளிப்படுத்த வேண்டும் என முன்னாள் சபாநாயகரும் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவருமான கருஜெயசூரிய வேண்டுகோள் விடுத்துள்ளார்.**



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

நாங்கள் மிக முக்கியமான தேர்தலொன்றை நெருங்கிக் கொண்டிருக்கும் தருணத்தில் அடுத்த ஐந்து வருடத்துக்கு இலங்கை மக்களுக்கு தங்களின் ஜனாதிபதியை தெரிவு செய்யும் வாய்ப்பு இலங்கையின் அனைத்து மக்களுக்கும் கிடைத்துள்ளது.

இந்த உரிமையை எவ்வித தலையீடும் இன்றி அனைத்து மக்களும் பயன்படுத்த முடியும்.

இந்த சூழ்நிலையில், ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்களை விட கட்சியின் தலைவர்களுக்கு மிகப்பெரும் பொறுப்புணர்வுள்ளது. மக்களின் முடிவுகளை மதிப்பதே அவர்களின் மிக முக்கிய கடமை.

மக்களின் முடிவுகளை மதிப்பது, நாட்டின் சட்டங்களையும், சமூக நீதியின் அடிப்படைக் கொள்கைகளையும் மதிப்பது மாத்திரமல்ல, அடிப்படை தார்மீக நாகரீக தராதரங்களை கடைப்பிடிப்பதுமாகும்.

அமைதியான வன்முறைகள் அற்ற தேர்தல் கலாசாரத்தை உருவாக்குவதற்கு இலங்கையின் தேர்தல் சமூகம் சமீப காலங்களில் வெளிப்படுத்தியுள்ள அர்ப்பணிப்பை நாங்கள் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

இந்த முயற்சிகள் தொடர வேண்டும், இதனை செய்ய தவறினால் இலங்கை பங்களாதேஷ் போன்ற நிலைக்கு தள்ளப்படும் ஆபத்து ஏற்படலாம்.

சில ஆபிரிக்க நாடுகளில் தேர்தலுக்கு பின்னரான வன்முறைகள் அந்த நாட்டுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதை உணர்வதும் அவ்வாறான சூழ்நிலையை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதும் அவசியமாகும்.

மேலும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுபவர், தேசத்துக்கான பெரும் பொறுப்புணர்வை ஏற்றுக் கொள்கின்றார்.

மாகாண சபைத் தேர்தல்கள், உள்ளூராட்சி தேர்தல்கள் உரிய முறையில் இடம்பெறுவதை உறுதி செய்வதும், மக்கள் ஜனநாயக நடைமுறைகளில் முழுமையாக ஈடுபடுவதற்கு அனுமதிப்பதும் முக்கியமான விடயங்களில் ஒன்று.

மேலும் தனிநபர் ஒருவருக்கு அளவுக்கதிகமான அதிகாரங்களை வழங்கும் தற்போதைய நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை நீக்குவதன் மூலம் தற்போதைய தேர்தல் முறையை சீர்திருத்துவதும் அவசியம்-என்றுள்ளது.

(அ)

# நிவித்திகல பிரதேசத்தில் வாக்காளர் அட்டை பறிப்பு

கொழும்பு, செப். 21

நிவித்திகல பிரதேசத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர் ஒருவரின் வீட்டுக்குள் நுழைந்த இனந்தெரியாத 6 பேர், வீட்டிலிருந்து 3 வாக்காளர் அட்டைகளை வலுக்கட்டாயமாக எடுத்துச் சென்றுள்ளதாக நிவித்திகல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முறைப்பாட்டாளர் நிவித்திகல, இந்தோல தும்மலவத்தை பிரதேசத்தில் இறப்பர் தோட்ட பகுதியிலுள்ள வீடொன்றில் வசித்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளரும் கூலித் தொழிலாளியுமான குறித்த பெண்ணே இம்முறைப்பாட்டினை செய்துள்ளார்.

முறைப்பாட்டாளரின் வீட்டுக்கு அண்மித்த பகுதிகளில் வீடுகள் இல்லையெனவும், அந்த வீட்டுக்குச் செல்வதற்கு வீதி இல்லை எனவும், வீட்டுக்குச் செல்ல சுமார் 2 கிலோமீற்றர் தூரம் செல்ல வேண்டியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பான சிசிரிவி காட்சிகளை ஆய்வு செய்த போதிலும் எந்த தடயமும் கிடைக்கவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(அ)

# சகோதரன் உயிரிழந்த சோகத்தில் சகோதரியும் உயிர்மாய்க்க முயற்சி!

யாழ்ப்பாணம், செப். 21

யாழ்ப்பாணத்தில் சகோதரன் உயிரிழந்த சோகத்தில் சகோதரியும் உயிர்மாய்க்க முயன்ற நிலையில், உறவினர்களால் காப்பாற்றப்பட்டு, வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் கடந்த புதன்கிழமை தவறான முடிவெடுத்து தனது உயிரை மாய்த்துள்ளார்.

இந்நிலையில் உயிரிழந்த இளைஞனின் சகோதரியான இரண்டு மாதக் குழந்தையின் தாயாரும் உயிர் மாய்க்க முயன்ற நிலையில் உறவினர்களால் காப்பாற்றப்பட்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(அ)

# மன்னார் விபத்தில் ஒருவர் காயம்

மன்னார், செப். 21

மன்னார் பெரிய பாலத்தடியில், நேற்று காலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில், ஒருவர் காயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் ஒன்று, வீதியை விட்டு விலகி பள்ளத்தில் விழுந்து விபத்திற்குள்ளானது.

இதில், மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற நபர் காயமடைந்த நிலையில், மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

(அ)

# யாழில் பால் புரைக்கேறியதில் 12 நாட்களேயான சிசு மரணம்!

யாழ்ப்பாணம், செப். 21

யாழ்.போதனா வைத்தியசாலையில் 12 நாட்களேயான ஆண் சிசு ஒன்று உயிரிழந்துள்ளது.

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த தம்பதிகளுக்கு கடந்த மாதம் 31ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலையில் ஆண் குழந்தை ஒன்று பிறந்துள்ளது.

பிறந்த குழந்தை நிறைகுறை காரணமாக யாழ்ப்பாண வைத்தியசாலையில் கண்காணிப்பில் இருந்த நிலையில் கடந்த 12ஆம் திகதி வியாழக்கிழமை காலை உயிரிழந்துள்ளது.

இம்மரணம் தொடர்பில் யாழ்.போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனையில் பால்புரைக்கேறி மரணம் சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

(அ)

# புலமைப்பரிசில் வினாத்தாள் கசிந்தமை உறுதியானால் மீள் பரீட்சை நடத்தப்படும்!

## கல்வி அமைச்சின் செயலாளர்

கொழும்பு, செப். 21

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் கசிந்துள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்தால், பரீட்சையை மீண்டும் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என கல்வி அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கடந்த 15ஆம் திகதி தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நடைபெற்றது. வினாத்தாள் கசிந்துள்ளதாக தகவல் வெளியானதை அடுத்து பரீட்சைகள் திணைக்களம் விசாரணைகளை நடத்தியது.

அந்த முதற்கட்ட விசாரணை அறிக்கையுடன் தற்போது குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அதன்படி, விசாரணை முடிவுகளின்படி செயற்படுமாறு ஜனாதிபதியும் அமைச்சரும் ஆலோசனை வழங்கினர் என அவர் கூறினார்.

(அ)

# புத்தளத்தில் 145 வாக்காளர் அட்டைகளை விநியோகிக்காமல் வைத்திருந்த ஊழியர்!

கொழும்பு, செப். 21

புத்தளத்தில் 145 வாக்காளர் அட்டைகளை விநியோகிக்காமல் தபால் ஊழியர் ஒருவர் தம்வசம் வைத்திருந்ததாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

புத்தளம் வாக்காளிப்பு நிலையங்களுக்கான ஐக்கிய தேசியக் கட்சியின் முகவரிடம் இருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் பேரில் புத்தளம் மாவட்ட தபால் அத்தியட்சகர் இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விநியோகிக்கப்படாத வாக்காளர் அட்டைகள் தபால் அத்தியட்சகரினால் வணிக நிறுவனமொன்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

(அ)

# மீண்டும் திறக்கப்படும் ஜெயவர்தனபுர பல்கலை!

கொழும்பு, செப். 21

மோதல் காரணமாக தற்காலிகமாக மூடப்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 24ஆம் திகதி கல்வி நடவடிக்கைகளுக்காக மீண்டும் திறக்கப்படும் என நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அதன்படி விடுதியில் உள்ள மாணவர்கள் செப்ரெம்பர் மாதம் 23ஆம் திகதி முதல் தங்களுடைய விடுதிகளுக்கு திரும்பலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இரண்டு மாணவர் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலினால் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் அண்மையில் தற்காலிகமாக மூடுவதற்கு நவடிக்கை எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# தேர்தல் கண்காணிப்பு குழு ஜனாதிபதியை சந்தித்தது!

கொழும்பு, செப். 21

ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு குழு ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து தமது விஜயத்தின் நோக்கத்தை ஜனாதிபதியுடன் பகிர்ந்து கொண்டதுடன் அமைதியான தேர்தலுக்கான பின்னணியை ஏற்படுத்தியமைக்கு பாராட்டுகளைத் தெரிவித்தது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

சீஷெல்ஸின் முன்னாள் ஜனாதிபதி [illegible] தலைமையிலான பொதுநலவாய தேர்தல் கண்காணிப்பு குழு சற்று முன்னர் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தது டன், தற்போதைய விஜயத்தின் முன்னேற்றம் மற்றும் நாடு முழு வதும் கண்காணிப்பு நடவடிக் கைகளை மேற்கொள்ளும் திட்டம் குறித்தும் கலந்துரையாடினர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஜனாதிபதித் தேர்தல்; வாக்களிப்புக்கு கிழக்கு தயார்!



மட்டக்களப்பு, செப். 21

**ஜனாதிபதித் தேர்தல் இன்று சனிக்கிழமை நடைபெறுகிறது. இதையொட்டி, நேற்றைய தினம் கிழக்கு மாகாண தேர்தல் மாவட்டங்களுக்கான வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகள் அனுப்பி வைக்கப்பட்டன.**

மட்டக்களப்பு மாவட்டத்துக்கான வாக்குப் பெட்டிகள் மட்டக்களப்பு இந்து கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள பிரதான தேர்தல் பணிமனையிலிருந்து 442 வாக்களிப்பு நிலையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டன. இதற்காக 260 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன.

இதேபோன்று, திருகோணமலை மாவட்டத்தின் 318 வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குப் பெட்டிகள் அனுப்பி வைக்கப்பட்டன. இங்கு, 3 இலட்சத்து 15 ஆயிரத்து 925 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

திகாமடுல்ல (அம்பாறை) மாவட்டத்தில் ஹாடி உயர் தொழில்நுட்ப வளாகத்தில் இருந்து அனைத்து வாக்குச் சாவடிகளுக்குமான வாக்குப் பெட்டிகள் எடுத்து செல்லப்பட்டன. 528 வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குபெட்டிகள் அரச ஊழியர்களின் பங்களிப்பில் பொலிஸ் பாதுகாப்புடன் எடுத்து செல்லப்பட்டன.



# கிழக்கின் 1,124 பாடசாலைகளுக்கு சூரியசக்தி மூலமாக மின்சாரம்!

திருகோணமலை, செப். 21

கிழக்கு மாகாணத்தில் முதன் முறையாக ஆயிரத்து 124 பாடசாலைகளுக்கு சூரிய மின்சக்தி திட்டத்தை மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆரம்பித்து வைத்துள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் முயற்சியால் முதல் கட்டமாக திருகோணமலையில் 348 பாடசாலைகளுக்கு சூரிய மின் தகடுகள் வழங்கி வைக்கப்பட்டன.

கிழக்கு மாகாணத்தில் மின்சார கட்டணம் செலுத்த இயலாத நிலையில் பல பாடசாலைகள் உள்ளன என்ற விடயம் ஆளுநர் செந்தில் தொண்டமானின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. இதையடுத்தே, கிழக்கு மாகாணத்தில் 1,124 பாடசாலைகளில் சூரிய மின்சக்தி திட்டத்தை அவர் ஆரம்பித்து வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# ஸலபிய்யா கலாபீடத்துக்கு புத்தகங்கள் அன்பளிப்பு!

அக்கரைப்பற்று, செப். 21

ஸலபிய்யா கலாபீடத்தின் 2014 ஆம் ஆண்டு பட்டம் பெற்று வெளியாகிய பழைய மாணவர்களால் கல்லூரி வாசிகசாலைக்கு ஒரு தொகுதி புத்தக அன்பளிப்பும் மற்றும் மரநடுகை செயல்பாடும் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கல்லூரியின் செயலாளர் ஏ. எல். கலீலுர் ரஹ்மான் உப அதிபர் எஸ்.யு ஸமீன் கலாபீட விரிவுரையாளர்கள் நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் கலாபீட மாணவர்கள் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வானது லுஹர் தொழுகையை தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்டதுடன் வாசிப்பின் அவசியம் மற்றும் மாணவர்களின் ஆளுமையாக்கத்தில் அதன் செல்வாக்கு குறித்த பல வேறு அம்சங்கள் மாணவர்களுடன் கலந்துரையாடப்பட்டன. அத்தோடு இந்நாட்டுக்கும் முஸ்லிம் சமூகத்துக்கும் பங்களிக்கும் வகையில் கலாபீடத்துக்கான ஆய்வு மையம் நிறுவப்படுவதின் தேவை குறித்து பேசப்பட்டதுடன் அதற்கான கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது. (ஐ)

# காத்தான்குடியை சேர்ந்தவர் யாழில் சடலமாக மீட்பு!

காத்தான்குடி, செப். 21

காத்தான்குடியை சேர்ந்த நபர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் சடலமாக மீட்கப்பட்டார். காத்தான்குடி பகுதியைச் சேர்ந்த மீரான் சாய்பு முகமது மர்சூ என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

இவர் யாழ்ப்பாணத்தில் உள்ள உணவகம் ஒன்றில் பணியாற்றியுள்ளார். கடந்த 17ஆம் திகதி உறக்கத்திலிருந்தபோது கட்டிலிலிருந்து தவறி வீழ்ந்து மயங்கினார்.

அவர் உடனடியாக யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஜம்மியத்துல் உலமா சபைக்கு அரசியல் நிலைப்பாடு இல்லை!

## சமூகவலைதள பதிவுக்கு எதிராக முறைப்பாடு

காத்தான்குடி, செப். 21

அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை ஓர் அரசியல் நிலைப்பாட்டில் இருப்பதாகத் தெரிவித்து குறித்த சபையின் இலச்சினை அதேசபையின் சமூக வலைத்தள பக்கங்களில் பகிரப்படுவது போன்ற ஒரு புகைப்படம் பகிரப்பட்டு வருவதாக பொலிஸ் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்த செய்திக்கும் தங்கள் சபைக்கும் எந்த தொடர்பும் இல்லை என அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை அறிவித்துள்ளது.

அந்த போலிச் செய்தியில் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்ற பாணியில் தகவல்கள் பகிரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடொன்றையும் பதிவு செய்துள்ளது. அத்துடன், குறிப்பாக அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை எந்த அரசியல் கட்சியை ஆதரித்தோ அல்லது எந்த அரசியல் நிலைப்பாட்டையோ இதுவரை எடுத்ததில்லை என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (ஐ)

# வாக்களிப்புக்கு தயார் நிலையில் அம்பாறை!

## மாவட்ட தெரிவித்தாட்சி அலுவலர்

அக்கரைப்பற்று, செப். 21

அம்பாறை மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரான சிந்தக அபேவிக்ரம குறிப்பிட்டார்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக அம்பாறை மாவட்ட செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 2024 ஜனாதிபதித் தேர்தலுக்காக அம்பாறை மாவட்டத்தில் 5 இலட்சத்து 55 ஆயிரத்து 432 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இதன்படி அம்பாறை தொகுதியில் ஒரு இலட்சத்து 88 ஆயிரத்து 222 பேர், சம்மாந்துறை 99 ஆயிரத்து 727 பேர், கல்முனை 82 ஆயிரத்து 830 பேர், பொத்துவில் தொகுதியில் ஒரு இலட்சத்து 84 ஆயிரத்து 653 பேர் ஆகும். இந்த மாவட்டத்தில் உள்ள தொகுதிகளின் எண்ணிக்கை (ஆசனங்கள்) 04 ஆகும்.

தபால் மூல வாக்களிப்புக்காக பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 27 ஆயிரத்து 645 ஆகும். ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 26 ஆயிரத்து 778 எனவும் 867 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார். (ஐ)

# படைத் தரப்பினருடன் நேற்று கலந்துரையாடல்

மட்டக்களப்பு, செப். 21

ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி மட்டக்களப்பு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் பொலிஸ் மற்றும் படைத் தரப்பு அதிகாரிகளுடன் நேற்று வெள்ளிக்கிழமை கலந்துரையாடல் ஒன்றை முன்னெடுத்தார்.

மாவட்ட தேர்தல்கள் பணிமனையில் நடந்த இந்த கலந்துரையாடலில் மாவட்டத்தின் பாதுகாப்பு மற்றும் அனர்த்தம் ஏற்பட்டால் எடுக்கப்படவேண்டிய முன்னாயத்த பணிகள் குறித்து ஆராயப்பட்டது.

இந் நிகழ்வில் உதவி தெரிவத்தாட்சி அலுவலர் திருமதி நவருபரஞ்சினி முகுந்தன், 243 படைப்பிரிவின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் சத்திம குமாரசிறி, விமானப்படை உயர் அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லெபனான்மீதும் போருக்கு தயாராகின்றது இஸ்ரேல்!



ஜெருசலேம், செப். 21

**ஹமாஸ் அமைப்பை அழிப்பதற்காக காசாமீது போர் தொடுத்த இஸ்ரேல் தற்போது லெபனான் மற்றும் ஹிஸ்புல்லா தீவிரவாதிகள்மீது கவனத்தை செலுத்தியுள்ளது.**

ஹமாஸ் அமைப்பு இஸ்ரேலுக்குள் புகுந்து கடந்த ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி தாக்குதல் நடத்தியது. இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். 251 பேர் பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து காசா மீது இஸ்ரேல் போர் தொடுத்தது. இந்த நிலையில், ஹமாஸ் அமைப்பினருக்கு ஆதரவாக லெபனானில் இருக்கும் ஹிஸ்புல்லா அமைப்பினர் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. இதற்கு பதிலடியாக இஸ்ரேலும் தாக்கி வருகிறது.

இந்த நிலையில், இரு நாட்களுக்கு முன்னர் ஹிஸ்புல்லா அமைப்பினர் பயன்படுத்தி பேஜர்கள், வோக்கி ரோக்கிகள் வெடித்து சிதறின. இதில், 32 பேர் உயிரிழந்தனர். 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலின் பின்னணியில் இஸ்ரேல் இருப்பதாக நம்பப்படுகிறது. இதனால் இஸ்ரேல் தனது கவனத்தை லெபானான் மற்றும் ஹிஸ்புல்லா அமைப்பினர்மீது திருப்பியுள்ளது. இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் யாவ் கேலன்ட் தனது படையினரிடம் பேசுகையில், “போரில் நாம் புதிய கட்டத்தை தொடங்கியுள்ளோம். அதற்கு தைரியம், உறுதி, விடாமுயற்சி ஆகியவை தேவை” என்றார்.

ஹிஸ்புல்லா அமைப்பினர் தாக்குதலால் ஆயிரக்கணக்கான இஸ்ரேலியர்கள் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் மீண்டும் சொந்த இடத்துக்கு திரும்புவதானால் ஹிஸ்புல்லாவின் அச்சுறுத்தல் ஒழிக்கப்பட வேண்டும் என்று இஸ்ரேல் கருதுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ட்ரம்பை விடவும் கமலா முன்னிலை

வாஷிங்டன், செப். 21

நேரடி விவாதத்துக்கு பின்னர் ட்ரம்பை விடவும் 4 சதவீதத்தால் கமலா ஹாரிஸுக்கான ஆதரவு முன்னிலை பெற்றுள்ளது.

அமெரிக்காவில் நவம்பர் 5ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுகிறது. இதில் ஆளும் கட்சியான ஜனநாயக கட்சிசார்பில் தற்போதைய துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ், எதிர்க்கட்சியான குடியரசு கட்சி சார்பில் டொனால்ட் டிரம்ப் ஆகியோருக்கிடையே நேரடி போட்டி நிலவுகிறது.

இருவரும் தனது பிரசாரத்தை தீவிரப்படுத்திய நிலையில், மக்கள் மத்தியில் யாருக்கு செல்வாக்கு அதிகம் உள்ளது என்பதை முடிவு செய்ய அவ்வப்போது கருத்துக் கணிப்பு நடத்தப்படுகிறது. கடந்த 10ஆம் திகதி இரு வேட்பாளர்களும் தொலைக் காட்சி நேரடி விவாதத்தில் ஈடு பட்டனர்.

இந்நிலையில் நேரடி விவாதம் மற்றும் அதற்கு முன்பு நடத்தப்பட்ட பல்வேறு கருத்துக் கணிப்பு முடிவுகள் வெளியாகி உள்ளன. இதில் கமலா ஹாரிஸ் முன்னிலையில் இருக்கிறார்.

கமலா ஹாரிசுக்கு ஆதரவாக 49 சதவீத வாக்காளர்களும், டிரம்புக்கு ஆதரவாக 45 சதவீத வாக்காளர்களும் கருத்து தெரிவித்துள்ளனர் என்று அறிய வருகின்றது. (ஐ)





# லெபனான் எல்லையில் படை குவிப்பில் இஸ்ரேல்!

ஜெருசலேம், செப். 21

லெபனானுடனான எல்லையில் இஸ்ரேல் படைகளை குவித்து பலப்படுத்தி வருகிறது. காசாவில் கடுமையான சண்டையில் பங்கேற்ற ஒரு சக்திவாய்ந்த இராணுவப் பிரிவான 98ஆவது படைப் பிரிவு இப்பகுதிக்கு நகர்த்தப்பட்டுள்ளது.

98ஆவது பிரிவில் ஆயிரக்கணக்கான படையினர் உள்ளனர். இதில் பராட்ரூப்பர் காலாட்படை பிரிவுகள் மற்றும் பீரங்கி மற்றும் எலைட் கொமாண்டோ படைகளும் உள்ளடங்குகின்றன.

இந்த படைப்பிரிவானது காசா போரில் முக்கிய பங்கு வகித்தது. ஹமாஸ் கோட்டையான கான் யூனிஸ் என்ற தெற்கு நகரத்தில் இராணுவ நடவடிக்கைகளுக்கு தலைமை தாங்கியது - என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உக்ரைனுக்கு விற்கப்பட்ட இந்திய வெடிமருந்துகள்!

## ரஷ்யா கடும் அதிருப்தி

புதுடில்லி, செப். 21

இந்திய ஆயுதத் தயாரிப்பாளர்களால் விற்கப்படும் வெடி மருந்துகள், ஐரோப்பிய வாடிக்கையாளர்களால் உக்ரைனுக்குத் திருப்பி விடப்பட்டுள்ளதாகவும் இதனால் இந்தியாமீது ரஷ்யா அதிருப்தி அடைந்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக ரெய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் வெளியிட்ட செய்தியில்,

இந்திய ஆயுதத் தயாரிப்பாளர்களால் விற்கப்படும் வெடி மருந்துகள், ஐரோப்பிய வாடிக்கையாளர்களால் உக்ரைனுக்குத் திருப்பி விடப்பட்டுள்ளன. ஆதாரங்கள் மற்றும் சுங்கத் தரவுகளின்படி, ரஷ்யாவுக்கு எதிராக உக்ரைனின் பாதுகாப்பை ஆதரிப்பதற்காக இத்தகைய பரிமாற்றங்கள் ஓர் ஆண்டுக்கும் மேலாக நிகழ்ந்துள்ளன. இந்திய ஆயுத ஏற்றுமதி விதிமுறைகள், வாங்குபவர்கள் அவற்றை பயன்படுத்துவதில் கட்டுப்பாடுகளை விதிக்கிறது. அங்கீகரிக்கப்படாத ஆயுத மாற்றங்கள் நடந்தால் எதிர்கால விற்பனை நிறுத்தப்படும் அபாயம் உள்ளது.



இந்திய ஆயுதங்கள் உக்ரைனுக்கு விற்கப்பட்டதா அல்லது நன்கொடையாக வழங்கப்பட்டதா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. எனினும், இது குறித்து ரஷ்யா, இந்தியாவிடம் தனது அதிருப்தியை தெரிவித்துள்ளது. ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கி லாவ்ரோவ், இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கரை சந்தித்து ரஷ்யாவின் அதிருப்தியை தெரிவித்துள்ளார். (ஐ)

# இஸ்ரேலின் நடவடிக்கை ஒரு போர் குற்றமாகும்!

## ஹிஸ்புல்லா தலைவர் சாடல்

பெய்ரூட், செப். 21

அனைத்து நெறிகள், சட்டங்களுக்கு அப்பால் சென்று இஸ்ரேல் போர்க் குற்றம் செய்துள்ளது என ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ருல்லா தெரிவித்துள்ளார்.

லெபனானில் பேஜர், வோக்கி - ரோக்கிகளை வெடிக்க வைத்து நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பிலேயே அவர் இவ்வாறு கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“லெபனான் வரலாற்றில் முன் எப்போதும் இல்லாத வகையில், மிகப் பெரிய பாதுகாப்பு அச்சுறுத்தல் மிகுந்த சூழலில் நாம் உள்ளோம் என்பதில் சந்தேகமில்லை. இது மாதிரியான தாக்குதலை உலகம் எதிர்கொண்டிருக்க வாய்ப்பில்லை. இந்தத் தாக்குதல் அனைத்து எல்லைகளையும் அத்துமீறி கடந்து மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எதிரி தரப்பான இஸ்ரேல் அனைத்து நெறிகள், சட்டங்களுக்கு அப்பால் சென்று அரங்கேற்றியுள்ள போர்க் குற்றம் இது. எதையும் பொருட்படுத்தாமல் இதனை இஸ்ரேல் செய்துள்ளது. இந்தப் படுகொலை சம்பவம் லெபனான் மற்றும் அதன் மக்கள் மீதான தாக்குதல். அதுதான் எதிரியின் நோக்கமும் கூட” என்றார்.

அவரது இந்தப் பேச்சு லெபனான் நாட்டு தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பானது. இருப்பினும் அவர் எங்கிருந்து பேசினார் என்ற விவரம் எதுவும் வெளியாகவில்லை. (ஐ)

# கர்ப்பவதியை பயமுறுத்திய நாய் உரிமையாளருக்கு நீதிமன்று அபராதம்!

பீஜிங், செப். 21

சீனாவில் ஒருவர் வளர்த்த நாய் கர்ப்பவதி ஒருவரை பயமுறுத்தியதால் அவரின் 4 மாத கரு கலைந்தது. இதனால், நாயின் உரிமையாளர் அந்த பெண்ணுக்கு 10 இலட்சம் யுவான் நட்டஈடு செலுத்துமாறு அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கர்ப்பமடைவதற்காக மூன்று வருடங்களுக்கும் மேல் செயற்கை கருத்தரித்தல் சிகிச்சை பெற்று வந்த நிலையில், குழந்தையை இழந்ததாக யான் என்ற பெண் வேதனை அடைந்துள்ளார்.

இதனையடுத்து நாயின் உரிமையாளர் லீ மீது அப்பெண் வழக்கு தொடர்ந்தார். பொது இடங்களில் நாயை கட்டி வைக்காமல் அவிழ்த்து விட்டு உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் கர்ப்பவதிக்கு இழப்பை ஏற்படுத்தியதால் அவருக்கு சுமார் 10 இலட்சம் யுவான் இழப்பீடு வழங்க வேண்டும் என்று லீக்கு நீதிபதி உத்தரவு பிறப்பித்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்காளர்களை கையாள்வதில் பொறுமையாக செயல்படுங்கள்!

## தேர்தல் பணியில் ஈடுபடவுள்ள அரச அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்

கொழும்பு, செப். 21

**இன்று நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் பணிகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள அனைத்து அரச அதிகாரிகளுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழு விசேட அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.**

குறித்த அறிவுறுத்தலில் "வாக்குப்பதிவின்போது, வாக்காளர்கள் மற்றும் வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளுடன் நல்ல உறவில் செயல்பட வேண்டும். அவர்களைக் கையாள்வதில், அர்த்தமுள்ளதாகவும், கனிவாகவும், பொறுமையாகவும் செயல்படுங்கள். யாருக்கும் சிறப்பு சலுகை வழங்க வேண்டாம். உங்கள் தொழில்முறை பாரபட்சமற்ற தன்மை ஒரு முக்கியமான விடயம். சுதந்திரமான மற்றும் நியாயமான சூழலில் தங்கள் மனசாட்சிப்படி வாக்களிக்கும் திறன் அவர்களுக்கு உள்ளது என்பதை உறுதிப்படுத்தும்" என தேர்தல் ஆணையம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# 1600 கிலோ பீடி இலைகள் கடற்படையினரால் மீட்பு

கொழும்பு, செப். 21

வெல்லமுண்டலம் முதல் கல்பிட்டி கொலங்கனத்த வரையிலான கடல் பகுதியிலும் கொலங்கநத்தை கடற்கரைக்கு அண்மித்த பகுதியிலும் கடற்படையினர் நடத்திய தனித்தனியான தேடுதல் நடவடிக்கைகளின் மூலம் கடத்தி வரப்பட்ட 1648 கிலோவுக்கும் அதிகமான பீடி இலைகள் கைப்பற்றப்பட்டன.

கடற்படையினரின் தேடுதல் நடவடிக்கையின்போது நீரில் மூழ்கியிருந்த சந்தேகத்திற்கிடமான 05 சாக்கு மூடைகள் மீட்கப்பட்டன. அந்த சாக்கு மூடைகளில் 169 கிலோ 500 கிராம் (ஈரமான எடை) கடத்தப்பட்ட பீடி இலைகள் மீட்கப்பட்டு கடற்படைக் காவலில் வைக்கப்பட்டன.

இதேவேளை, மற்றொரு சுற்றிவளைப்பு நடவடிக்கையில் புதர்களுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த மேலும் 45 சாக்கு மூடைகள் மீட்கப்பட்டன. அந்த சாக்குகளில் 1,479 கிலோ (ஈரமான எடை) எடையுள்ள பீடி இலைகள் அடைக்கப்பட்டிருந்தன. முந்தைய மீட்புடன் சேர்த்து, இந்த நடவடிக்கைகளில் கைப்பற்றப்பட்ட பீடி இலைகளின் மொத்த அளவு 1,648 கிலோ மற்றும் 500 கிராம் ஆகும். (அ)

# வெலகெதர மத்திய கல்லூரிக்கு நவீன வசதியுடன்கூடிய நூலகம்!

## இலங்கைக்கான சீனத் தூதரகம் நிதியுதவி

கொழும்பு, செப். 21

குருநாகல் டி.பி.வெலகெதர மத்திய கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்ட நவீன மற்றும் முழுமையான நூலகத்தை மாணவர்களிடம் கையளிக்கும் நிகழ்வு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தலைமையில் நடைபெற்றது.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் வழிகாட்டலின்படி ஜனாதிபதி அலுவலகத்தினால் இந்த சகல வசதிகளுடனும் கூடிய நூலகம் வழங்கப்பட்டுள்ளதுடன், இலங்கைக்கான சீனத் தூதரகம் இதற்கு நிதியுதவி வழங்கியுள்ளது.

டி.பி. வெலகெதர மத்திய கல்லூரியில் 2000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்பதோடு மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கும் மேலதிக கல்வியை பெறுவதற்கு உதவியாக பல புத்தகங்கள், டிஜிற்றல் தொழில்நுட்பத்தின் ஊடாக அறிவைப் பெறுவதற்கான உபகரணங்கள், இணைய வசதிகள் மற்றும் ஸ்மார்ட் தொலைக்காட்சி மற்றும் பல மின்னணு சாதனங்களும் இந்த நூலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் நீர்கொழும்பு துவ கனிஷ்ட கல்லூரி மற்றும் நவகத்தகம கொங்கடவல கல்லூரி ஆகிய இரண்டு பாடசாலை நூலகங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

நூலகத்தை மாணவர்களிடம் கையளிக்கும் நிகழ்வில் இலங்கைக்கான சீனத் தூதரக பிரதித் தூதுவர், வடமேல் மாகாண ஆளுநர் தீபிகா.கே. குணரத்ன மற்றும் பாடசாலை அதிபர் ஆசிரியர்கள், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் என பலர் கலந்துகொண்டனர். (அ)

# சமூக ஊடகங்களில் 800இற்கும் மேற்பட்ட இடுகைகளை உடன் நீக்குமாறு பணிப்பு!

கொழும்பு, செப். 21

2024 ஜனாதிபதித் தேர்தலின் போது தேர்தல் சட்டங்களை மீறியதற்காக சமூக ஊடக தளங்களில் இருந்து இதுவரை 800க்கும் மேற்பட்ட இடுகைகளை நீக்குமாறு தேர்தல் ஆணையகம் கோரியுள்ளது.

இந்த விதிமீறல்கள் குறித்து முழுமையான விசாரணைக்குப் பின்னர் மெட்டா, யூரியூப், ரிக்ரொக் மற்றும் கூகுள் போன்ற தளங்களில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையகம் ஒரு அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகளில், 121 இணைப்புகள் சமூக ஊடகங்களிலிருந்து அகற்றப்பட்டுள்ளன. அதேநேரத்தில் 116 இணைப்புகள் தளங்களால் அகற்றப்படவில்லை. ஏனெனில் அவை சமூக வழிகாட்டுதல்களை மீறவில்லை என்று கூறப்படுகிறது.

500 மேலதிக இணைப்புகள் தொடர்பான முறைப்பாடுகளுக்கு சமூக ஊடக நிறுவனங்கள் இன்னும் பதிலளிக்கவில்லை என்றும் தேர்தல் ஆணையம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# நாட்டில் காசநோயாளிகள் எண்ணிக்கை அதிகரிப்பு!

கொழும்பு, செப். 21

கடந்த வருடம் பதிவான காசநோயாளிகளின் எண்ணிக்கையில் 46 வீதமானவர்கள் மேல் மாகாணத்தில் இருந்து பதிவாகியுள்ளதாக காசநோய் மற்றும் மார்பு நோய்களுக்கான தேசிய வேலைத்திட்டம் தெரிவித்துள்ளது.

அவர்களில் 25 வீதமானவர்கள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளதாகவும், கொழும்பு மாநகர சபையின் எல்லைக்குள் மட்டுமே பதிவாகியுள்ள காசநோயாளிகளின் எண்ணிக்கை இந்தியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் எண்ணிக்கைக்கு சமமாக இருப்பதாக காசநோய் மற்றும் மார்பு நோய்கள் தொடர்பான தேசிய வேலைத்திட்டத்தின் சமூக சுகாதார வைத்திய நிபுணர் மிசாயா காதர் தெரிவித்தார். (அ)

# தேர்தல் பணிகளில் இருந்து 9 அரச அதிகாரிகள் நீக்கம்!

கொழும்பு, செப். 21

தேர்தல் பணிகளில் இருந்து 09 அரச அதிகாரிகள் நீக்கப்பட்டுள்ளனர் என அம்பாந்தோட்டை மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி எம்.பி.சுமணசேகர தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளர்களை ஊக்குவிக்கும் வகையில் செயற்பட்ட 9 அரச அதிகாரிகளே இவ்வாறு நீக்கப்பட்டதாக அவர் கூறினார்.

அதன்படி 9 அதிபர்கள், ஒரு பிரதி அதிபர், நான்கு ஆசிரியர்கள், ஒரு பொதுச் சுகாதார பரிசோதகர், சமுர்த்தி முகாமையாளர் மற்றும் மூன்று வைத்தியர்கள் உட்பட 19 அரச அதிகாரிகள் ஜனாதிபதி வேட்பாளர்களை ஊக்குவிப்பதாக அம்பாந்தோட்டை மாவட்ட தேர்தல் சர்ச்சைத் தீர்வு நிலையத்திற்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# தெஹிவளையில் துப்பாக்கிச் சூடு!

கொழும்பு, செப். 21

தெஹிவளை பகுதியில் துப்பாக்கிச் சூடு சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

தெஹிவளை, கடத்தை வீதி பகுதியில் இந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் கூறினர்.

வீடொன்றுக்கு முன்னால் நபர் ஒருவரை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இதில் காயமடைந்த 45 வயதுடைய நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சந்தேக நபரை கைது செய்வதற்கான நடவடிக்கையை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (அ)

# எதிர்பார்த்த இலக்கை எட்டியது 2024 சிறுபோக நெல் அறுவடை!

කෘෂිකර්ම දෙපාර්තමේන්තුව
விவசாயத் திணைக்களம்
Department of Agriculture

கொழும்பு, செப். 21

2024ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெல் அறுவடையில் எதிர்பார்த்த இலக்கை எட்டியுள்ளதாக விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, இந்த ஆண்டு சிறுபோக நெல் அறுவடை 2.6 மில்லியன் மெற்றிக் தொன்னாக அதிகரித்துள்ளது.

கடந்த சிறுபோகத்தின்போது 2 மில்லியன் மெற்றிக் தொன் நெல் அறுவடை பதிவு செய்யப்பட்டிருந்ததாக விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, கடந்த பெரும் போகத்தில் 3.2 மில்லியன் மெற்றிக் தொன் நெல் அறுவடை செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, இந்த வருடம் மொத்த நெல் அறுவடை 5.8 மில்லியன் மெற்றிக் தொன்னாக அதிகரித்துள்ளதுடன், உற்பத்தி செய்யக்கூடிய அரிசியின் அளவு 3 மில்லியன் மெற்றிக் தொன்னாகும் என விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# மதுபானச்சாலைகள் இரு தினங்கள் பூட்டு!

கொழும்பு, செப்.

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு இன்றுயும், நாளையும் நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து மதுபானச்சாலைகளும் மூடப்படவுள்ளதாக கலால் வரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் கோரிக்கைக்கு அமைய, மதுபானச்சாலைகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கலால் வரி திணைக்கள ஆணையாளர் நாயகம் எம்.ஜீ. குணசிறி தெரிவித்துள்ளார். (அ)

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட எட்டு பேர் கைது!

கொழும்பு, செப். 21

வடக்கு மற்றும் கிழக்கு கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். திருகோணமலை, ஜின்னாபுரம் மற்றும் முல்லைத்தீவு கடற்பரப்பில் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின் போது அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதானவர்கள் 17 முதல் 45 வயதுகளுக்கிடைப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகக் கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாக்களிப்பதற்கு...

செல்லுபடியாகும். மேலும், செல்லுபடியாகும் கடவுச் சீட்டு, செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம், அரச சேவை ஓய்வூதியர் அடையாள அட்டை, பழைய அல்லது ஈ-அடையாள அட்டை ஆகிய இரண்டும் செல்லுபடியாகும்.

மேலும், தெளிவற்ற அடையாள அட்டைகள், புதிய தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் போது வழங்கப்படும் பற்றுச்சீட்டு போன்ற புகைப்படத்துடன் கூடிய அல்லது இல்லாத வேறு எந்த ஆவணமும் வாக்குச்சாவடியில் ஏற்றுக்கொள்ளப்படாது. - என்றார். (அ)

## அமைதியான...

ஏதேனும் அசம்பாவித நிலைமை ஏற்படுமாக இருந்தால் அந்த வாக்களிப்பு நிலையத்தின் வாக்கு சூனியமாக்கப்படும். அந்தத் தொகுதிகளில் மீண்டும் வாக்கெடுப்பை நடத்தும் வரையில் நாடாளவிய ரீதியிலான இறுதித் தேர்தல் முடிவுகளை அறிவிக்க முடியாத நிலைமை ஏற்படும். தேர்தல் தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ள ஆலோசனைகளை பின்பற்றி சுமுகமான முறையில் தேர்தலை நடத்த அனைவரின் ஒத்துழைப்பும் அவசியம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் நடவடிக்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவொரு தரப்பினருக்கும் எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். வாக்கு உங்கள் உரிமை, அதனை நாட்டு மக்கள் கட்டாயம் பயன்படுத்த வேண்டும். தேர்தல் காலத்தில் சட்டத்தை கடுமையாக செயல்படுத்துமாறு அனைத்து பாதுகாப்பு தரப்பினருக்கும் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன், எந்தவோர் அவசர நிலைமையின் போதும் அழைப்பதற்காக முப்படையினரும் தயாராக வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார். (ஐ)

## ஜனாதிபதி...

முடியும்.

வாக்காளர் அட்டைகள் கிடைக்காதவர்கள் இன்றைய தினமும் தமக்கான அஞ்சல் பணிமனைக்கு சென்று ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தி பெற்றுக்கொள்ள முடியும் என்று தபால் மா அதிபர் அறிவித்துள்ளார்.

**வாக்களிக்கும் முறை**

வாக்காளர்கள் வாக்குச்சீட்டில் தாம் விரும்பும் வேட்பாளரின் பெயர், மற்றும் சின்னத்துக்கு அருகே உள்ள பெட்டியில் X புள்ளடியிட்டு தமது வாக்கை செலுத்த முடியும்.

ஒன்றுக்கு மேற்பட்ட விருப்புகளையும் வாக்களர்கள் தெரிவு செய்யமுடியும். எனினும் அதிகபட்சம் மூவருக்கே வாக்களிக்க முடியும். வேட்பாளர்களுக்கு 1, 2, 3 என்ற விருப்பத் தெரிவை இடுவதன் மூலம் வாக்காளர்கள் தமது தெரிவை செய்ய முடியும். இருவரை தெரிவு செய்ய விரும்பின் 1, 2 என்றும் தெரிவு செய்ய முடியும்.

ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கு புள்ளடி இடுவதும் அல்லது புள்ளடியும் இலக்கமும் இடுவதும் அல்லது 1 இலக்கத்தை குறிப்பிடாமல் அடுத்த இலக்கங்களை குறிப்பிடுவதும் தவறாகும். மேலும், வாக்குச்சீட்டில் வேறு ஏதேனும் அடையாளங்கள் அல்லது எழுத்துக்கள் எழுதப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்பட்ட வாக்காகக் கருதப்படும்.

இதேவேளை, வாக்களிப்பு தினமான இன்றும் வாக்குகள் எண்ணப்பட்டு பெறுபேறுகள் அறிவிக்கப்படும் காலத்திலும் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் நடைமுறையில் இருக்கும் என்று பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது. அத்துடன், தேர்தல் கடமைக்காக 63 ஆயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தீர்மானித்த சின்னத்துக்கு தைரியமாக வாக்களிக்குக

## மனோ எம். பி. கோரிக்கை



கொழும்பு, செப். 21

இன்றைய தினம் நடக்கும் தேர்தலில் வாக்களிக்காமல் இருந்து விடாதீர்கள். நிதானமாக - தீர்மானித்த சின்னத்துக்கு தைரியமாக மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று மனோ கணேசன் எம். பி. கேட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

நடைபெறப்போவது முழு நாட்டுக்குமான ஜனாதிபதித் தேர்தல். தேர்தல் சட்டப்படி வெற்றி பெற வேண்டிய வேட்பாளர், முதல் சுற்றில் 50 (மூ) விகிதமும், அதனுடன் மேலதிகமாக குறைந்த பட்சம் ஒரு (1) வாக்கும் பெற வேண்டும். ஆகவே ஒவ்வொரு வாக்கும் இங்கே முக்கியம் ஆகின்றது.

இது ஜனாதிபதித் தேர்தல் என்பதால், முழு நாடும் ஒரே தேர்தல் தொகுதி ஆகிறது. வாக்குகள் எண்ணப்படுவது, அறிவிக்க படுவது மாவட்ட, தொகுதி மட்டங்களாக இருந்தாலும், இங்கே முழு நாடும் ஒரு தேர்தல் தொகுதி.

ஆகவே தாமதமின்றி காலையிலேயே சென்று வாக்கு அளியுங்கள். உணர்ச்சிகளுக்கு இடம் தராமல், நிதானமாக சிந்தித்து, தீர்மானித்த சின்னத்துக்கு தைரியமாக சென்று வாக்களியுங்கள்.

வாக்களிக்காமல் மாத்திரம் ஒரு போதும் இருந்து விடாதீர்கள் - என் றுள்ளது. (ஐ)

# திலீபன் ஆவண காட்சியகம் நல்லூரில் திறப்பு!

யாழ்ப்பாணம், செப். 21

தியாக தீபம் திலீபனின் வரலாற்றை எதிர்கால சந்ததியினருக்கு கடத்தும் முகமாக அவரின் வரலாற்றை எடுத்தியம்பும் "பார்த்தீபன் திலீபனாக! திலீபன் தியாக தீபமாக!!" எனும் தொனிப் பொருளுடன் கூடிய ஆவணக் காட்சியகம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

நல்லூரிலுள்ள தியாக தீபம் திலீபன் நினைவாலயம் முன்றலில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணியளவில் மாவீரர்களின் பெற்றோர், முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் காப்பகம் மாவீரர்களின் பெற்றோரால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த ஆவணக் காப்பகத்தில், தியாக தீபம் திலீபனின் வரலாற்று புகைப்படங்கள் என்பன தொகுக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

நேற்றைய நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர், அரசியல் தலைவர்கள், சிவில் சமூகத்தினர், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

## பாராளுமன்ற...

திரும்புவார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுஜன பெரமுன கட்சியின் ஸ்தாபகரான பஸில் ராஜபக்ஷ இன்று (நேற்று) அதிகாலை இலங்கையிலிருந்து வெளியேறியுள்ளார். அவர் சில வாரங்களுக்கு முன்னர் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படவிருந்தார்.

எனினும் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவின் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் காரணமாக அவருக்கான வைத்திய பரிசோதனைகள் மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டிருந்தது.

தான் நாட்டை விட்டு வெளியேறப் போவது தொடர்பில் பஸில் ராஜபக்ஷ ஏற்கனவே கட்சிக்கு அறிவித்திருந்தார். எனினும் அவர் தனது மருத்துவப் பரிசோதனையை தொடர்ந்து, கட்சியின் பொதுத் தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக விரைவில் நாடு திரும்புவார் - என்றார்.

இதேவேளை பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவின் இரண்டு பிள்ளைகளும் அவரது மனைவியின் குடும்பத்துடன் நேற்று இலங்கையை விட்டு வெளியேறியதாகக் கூறப்படும் கூற்றுக்கள் உண்மைக்குப் புறம்பானது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாமல் ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்பத்தினர் கதிர்காமம் விகாரைக்கு சமய அனுஷ்டானங்களுக்காகச் சென்றுள்ளனர் எனவும் அவர் கூறினார். (அ)

# யாழ்., முல்லைத்தீவு வாக்களிப்புக்கு தயார்



யாழ்ப்பாணம், செப். 21

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்கள் இன்றைய தினம் தேர்தலுக்கு தயாராக உள்ளன.

நேற்றைய தினம் சகல மாவட்டங்களிலும் வாக்குப் பெட்டிகளை வாக்களிப்பு நிலையங்களுக்கு கொண்டு செல்லும் பணி முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் யாழ். மத்திய கல்லூரியிலிருந்து 511 வாக்குச் சாவடிகளுக்குமான வாக்குப் பெட்டிகள் கொண்டு செல்லப்பட்டன.

நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு மற்றும் எழுவைதீவு பகுதிகளுக்கும் படகுகள் மூலம் வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லப்பட்டன.

இதேவேளை, தேர்தல் கண்காணிப்பாளர்களும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதேபோன்று, முல்லைத்தீவு மாவட்டத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கான 137 வாக்களிப்பு நிலையங்களுக்குரிய வாக்கு பெட்டிகள் முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டன. மாவட்டத்தில் 86 ஆயிரத்து 889 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 3எம்.பிக்களின்...

மாதம் 29ஆம் திகதி நடைபெற்ற பொதுஜன பெரமுனவின் அரசியல் சபைக் கூட்டத்தில் அந்தக் கட்சியின் வேட்பாளருக்கு ஆதரவளிக்கும் தீர்மானத்துக்கு எதிராக வேறொரு வேட்பாளரை ஆதரித்தமைக்காகவே அவர்களின் கட்சி உறுப்புரிமை பறிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## இலங்கையில்...

இலங்கையில் தற்போது தேர்தல் காலம் என்பதால் இரு வருடங்கள் கால நீடிப்பை வழங்கவும் ஆலோசனை வழங்கப்பட்டது.

முன்னர், 46/1 தீர்மானம் காலநீடிப்பு செய்யப்பட்டு 51/1 தீர்மானமாக நீடிக்கப்பட்டது. இதற்கான காலமும் இந்த மாதத்துடன் நிறைவடைகிறது. இந்த நிலையில், புதிய தீர்மானத்தை கொண்டுவருவது அல்லது 51/1 தீர்மானத்தை கால நீடிப்பு செய்வது தொடர்பில் பேசப்பட்டது. இணை அனுசரணை வழங்கிய நாடுகளின் வரைவு எதிர்வரும் ஒக்ரோபர் 7ஆம் திகதி மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்படும்.

தேர்தலின் பின்னர் அமையும் புதிய அரசாங்கத்தின் பதிலை பொறுத்தே தீர்மானம் தொடர்பில் வாக்கெடுப்பு நடத்துவதா அல்லது இல்லையா என்பது குறித்து தீர்மானிக்கப்படும் என்றும் தெரிகின்றது. (ஐ)

## நாமலின்...

டுபாய்க்கு பயணமாகியுள்ளனர்.

இவர்கள், டுபாய்க்கு சென்று அங்கிருந்து அமெரிக்காவுக்கு செல்வதற்கு திட்டமிட்டிருக்கலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)

## நேற்று...

அதன்படி நேற்று அதிகாலை 03.05 மணிக்கு எமிரேட்ஸ் ஏயார்லைன்ஸின் ஈ.கே.-649 விமானத்தில் பஸில் ராஜபக்ஷ டுபாய்க்கு சென்றுள்ளார். அவர் அங்கு இருந்து அமெரிக்கா செல்லத் திட்டமிட்டுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை, நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தல் இன்று நடைபெறவுள்ள நிலையில் பஸில் ராஜபக்ஷ டுபாய்க்கு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## வாக்குச்சாவடி...

இவ்வாறானதொரு பின்னணியில் தேர்தல் தினமான இன்றும், வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படும் நாளையும் தமது குழுவினரை விசேட மனித உரிமைகள் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தியிருப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

## மாத்தறை துப்பாக்கிப் பிரயோகம் இருவர் அதிரடிப்படையால் கைது

கொழும்பு, செப். 21

மாத்தறை மிதிகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொவியாபான பிரதேசத்தில், மீன் விற்பனை நிலையமொன்றில், நேற்று முன் தினம் காலை இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்துடன் தொடர்புடைய இரண்டு சந்தேக நபர்கள், பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில், ஒருவர் உயிரிழந்ததுடன், இருவர் காயமடைந்தனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்ட போது, திகரெத்த மற்றும் ஹாதபெலேன பிரதேசங்களில், சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

கோட்டை மற்றும் அகுலுகஹா பிரதேசங்களை சேர்ந்த, 38 மற்றும் 30 வயதான இருவரும் கைது செய்யப்பட்டதுடன், சந்தேக நபர்களிடம் இருந்து, 11 கிராம் 500 மில்லி கிராம் ஹெரோயின் மற்றும் முச்சக்கரவண்டி என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

## பிரசார கூட்டம் நடத்தியதாக தொலைபேசி மூலம் மிரட்டல்

கொழும்பு, செப். 21

ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரின் வெற்றிக்காக குறித்த கட்சியின் ஆதரவாளர்களுடன் தனது நிறுவனத்தில் கூட்டமொன்றை நடத்தியதற்காக மற்றுமொரு கட்சியின் ஆதரவாளர் ஒருவர் தன்னை அச்சுறுத்தியுள்ளதாக ஒருவர் வீரம்புகெதர பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

பரகம்மன, யக்வில பிரதேசத்தில் வசிக்கும் 54 வயதுடைய கட்சி ஆதரவாளர் ஒருவர் செய்த முறைப்பாட்டின் பிரகாரம், பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

முறைப்பாட்டாளர் கல் குவாரி நிறுவனம் நடத்தி வருவதாகவும், அவர் தனது வேலைத்தளத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்காக ஒரு கூட்டத்தை நடத்தியதாகவும், ஆனால் வேறொரு கட்சிக்காரர் தனது கையடக்க தொலைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்தி மிரட்டியதாகவும் கூறியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வீரம்புகெதர பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## வசந்த முதலிகே உயர்நீதிமன்றில் மனு!

கொழும்பு, செப். 21

சர்வதேச இறையாண்மை பத்திரங்கள் தொடர்பான அரசாங்கத்தின் முடிவு பொதுமக்களின் அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாக தீர்ப்பளிக்குமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் அழைப்பாளர் வசந்த முதலிகேயால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.நிதியமைச்சர், நிதியமைச்சின் செயலாளர், மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் பலர் அந்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சர்வதேச இறையாண்மை பத்திரங்கள் தொடர்பான கடன், 05 முதல் 07 வீதத்திற்கு இடைப்பட்ட வட்டி விகிதத்தில் பெறப்பட்டதாக மனுதாரர் தெரிவித்துள்ளதுடன் கடன் மறுசீரமைப்பு திட்டத்தின் கீழ் 8.2 வீதத்தை அரசு உயர்த்திய பின்னர் 7.4 வீதமாக குறைத்துள்ளதாக மனுவில் கூறப்பட்டுள்ளது.

இதன் காரணமாக சர்வதேச இறையாண்மை பத்திரங்களுக்காக செலுத்த வேண்டிய 16.4 பில்லியன் அமெரிக்க டொலர் கடன், 19.1 பில்லியன் அமெரிக்க டொலர்க ளாக அதிகரித்து இலங்கை மக்கள் மீது பாரிய பொருளாதார சுமையை ஏற்படுத்தியுள்ளதாக அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த கடன்கள் அமெரிக்க சட்டத்தின் கீழ் பெறப்பட்டாலும் அந்த கடனில் ஒரு பகுதியை குறைத்துக்கொள்ள வாய்ப்பு இருந்த போதிலும் அரசாங்கம் அதனை கவனத்தில் கொள்ளாமல் வட்டி விகிதத்தை அதிகரித்து இந்நாட்டு மக்களுக்கு பெரும் பாதகத்தை ஏற்படுத்தியுள்ளதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, குறித்த கடன் மறுசீரமைப்பு திட்டத்தின் மூலம் மக்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுவதாக தீர்ப்பு வழங்கப்பட வேண்டுமென மனுதாரர் மேலும் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தேர்தலில் எவர் வெற்றி பெற்றாலும் கடினமான சவாலை எதிர்கொள்வர்!

**சர்வதேச நெருக்கடி குழு சுட்டிக்காட்டு**

கொழும்பு, செப். 21

**ஜனாதிபதித் தேர்தலில் எவர் வெற்றி பெற்றாலும் கடினமான சவால்களை அவர் எதிர்கொள்வார் என்று சர்வதேச நெருக்கடி குழுவின் இலங்கை தொடர்பான மூத்த ஆலோசகர் அலன் கீனன் கூறியுள்ளார்.**

பொருளாதாரம் எந்த நேரத்திலும் சிறப்பாக வர வாய்ப்பில்லை, மேலும் வலுவான மக்கள் ஆதரவு இல்லாமல் ஒரு ஜனாதிபதி இருப்பது மிகவும் ஆபத்தான நிலையை முன்வைக்கக்கூடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் கடந்த கால தேர்தல்கள் எப்போதும் இனம், மதம் மற்றும் போர் போன்ற பிரச்சினைகளால் ஆதிக்கம் செலுத்தப்பட்டவை என்று வெளிநாட்டு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ் சிறுபான்மையினர் துன்புறுத்தப்பட்டு, பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் புறக்கணிக்கப்பட்ட நிலையில், பெரும்பான்மையான அதிகாரமும் செல்வமும் சிங்கள பௌத்த பெரும்பான்மையினரிடம் தொடர்ந்து உள்ளதாக அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது

இந்தநிலையில், முதன்முறையாக, பாரம்பரிய அரசியலில் பரவலான அதிருப்தி இன்று சனிக்கிழமை நடைபெறும் தேர்தலில் எந்த ஒரு வேட்பாளருக்கும் அமோக பெரும்பான்மையை வழங்க வாய்ப்பில்லை என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். (அ)

# இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் கண்டுகொள்ளாத தமிழக அகதிகள்

சென்னை, செப். 21

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், தமிழ்நாட்டின் பல்வேறு முகாம்களில் வசிக்கும் தமிழ் அகதிகள் மத்தியில் இந்தச் சூழல் எந்த சலசலப்பையும் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை என்று இந்திய ஊடகங்கள் கூறுகின்றன.

அகதிகள் தங்களின் உடனடி மற்றும் அன்றாட பிரச்சினைகளில் அதிக அக்கறை காட்டுவதால், இந்த விடயத்தில் அதிக அக்கறை காட்டவில்லை என்று கருத்தப்படுகிறது.

இலங்கையில் தேர்தல் இடம் பெறவுள்ளது என்பது கூட, முகாம்களில் இருக்கும் பலருக்குத் தெரியாது. சொல்லப்போனால், இலங்கையின் அரசியல் ரீதியாக என்ன நடக்கிறது என்பது கூட தெரியவில்லை என்று அகதிகளில் சிலர் கூறியுள்ளனர்.

முகாம்களில் வசிக்கும் அகதிகளில் கணிசமான பகுதியினரான, சுமார் 58,000 பேர் இந்தியக் குடியுரிமைக்கான வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

எனவே அவர்களுக்கு இலங்கை விடயங்களை பற்றி அக்கறை இல்லை என்று களத் தகவல்கள் கூறுகின்றன.

அதே நேரத்தில், கன்னியாகுமரியில் உள்ள முகாம் ஒன்றில் 40 பேர், சென்னையில் உள்ள இலங்கை துணை தூதரகத்தால் வழங்கப்படும் அனைத்து நாட்டிற்கான கடவுச்சீட்டுகளைப் பெற்றதாகக் கூறப்படுகிறது.

கடவுச்சீட்டுகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் அவர்கள் இலங்கைப் பிரஜைகளாகக் கருதப்படுகின்றனர்.

எனினும் அவர்களுக்கு இந்த தேர்தலில் வாக்களிக்க வாய்ப்பில்லை.

முன்னதாகவே தமது வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கு ஒரு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கலாம் என்று அவர்கள் கருத்துரைத்துள்ளனர். (அ)

# அம்பன் பிரதேச வைத்தியசாலையில் இரவில் அம்புலன்ஸும் இல்லை மருத்துவரும் இல்லை!

வடமராட்சி, செப். 21

வடமராட்சி கிழக்கு அம்பன் பிரதேச வைத்தியசாலையில் நோயாளர் காவு வண்டியோ அல்லது மருத்துவர்களோ இரவு வேளைகளில் இல்லாமை காரணமாக நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அம்பன் பிரதேச வைத்தியசாலை தரம் இரண்டு ஆகும். இங்கு இரண்டு மருத்துவர்கள் பகலில் கடமையில் உள்ளனர். ஆனால் இரவு வேளைகளில் மருத்துவர்கள் எவரும் கடமையாற்றுவதில்லை. இரவு வேளைகளில் மருத்துவமனைக்கு அவசர நோயாளர்கள் செல்லும்போது நோயாளர் காவு வண்டி மூலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்புவது வழமையாகும்.

இந்நிலையில் நேற்று முன்தினம் அம்பன் பிரதேச வைத்தியசாலைக்கு நாகர்கோவில் பகுதியிலிருந்து வலிப்பு ஏற்பட்ட சிறுமி ஒருத்தியை அவரது பெற்றோர் இரவு 8:30 மணியளவில் கொண்டு சென்றுள்ளனர்.

ஆனால் அங்கு அம்பன் பிரதேச வைத்தியசாலையில் நோயாளர் காவு வண்டி இல்லை. அது ஏங்கே என்று கேட்டபோது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

மருத்துவரும் இல்லை. நோயாளர் காவு வண்டியும் இல்லை. இவ்வாறு இருக்கையில் அவசர நோயாளர்களின் நிலை என்ன என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

இருந்தும் அம்பன் பிரதேச வைத்தியசாலையில் பணியாற்றும் ஊழியர்கள் மருதங்கேணி பிரதேச வைத்தியசாலை நோயாளர் காவு வண்டியை அழைத்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பியுள்ளனர்.

இதனால் சுமார் 50 நிமிடங்கள் வரை தாமதம் ஏற்பட்டுள்ளது. (அ)

## மரத்திலிருந்து விழுந்து இளம் குடும்பஸ்தர் பலி!

கொழும்பு, செப். 21

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மடக்கும்புர, புதுக்காடு தோட்டத்தை சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் மரத்தில் இருந்து விழுந்து பலியாகியுள்ளார்.

31 வயதான நடராஜ் கணகேஸ்வரன் எனும் ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பூண்டுலோயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கயிப்பு கலை பிரதேசத்திலுள்ள உயரமான மரத்தில் ஏறி கிளைகளை வெட்டிக் கொண்டிருந்தபோதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் பூண்டுலோயா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர்.

விறகு வெட்டியே இவர் தனது குடும்பத்தை கவனித்து வந்துள்ளார். நேற்று மரத்தில் ஏறி விறகுவெட்டும்போது குளவி கொட்டுக்கு இலக்கான நிலையிலேயே மரத்தில் இருந்து விழுந்தார் என மக்கள் தெரிவித்தனர். (அ)

## இரு கைக்குண்டுகள் மீட்பு

மட்டக்களப்பு, செப். 21

மட்டக்களப்பு, வவுணதீவு பொலிஸ் பிரிவில் இரண்டு கைக்குண்டுகள் மீட்கப்பட்டதாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

விளாவட்டவான் கிராம சேவகர் பிரிவில், யாட் வீதியில் உள்ள காணி அருகில் இருந்து இக்குண்டுகள் மீட்கப்பட்டதாக தெரியவருகிறது.

நேற்று வெள்ளிக்கிழமை பொலிஸாருக்கு பொது மக்கள் வழங்கிய தகவலுக்கு அமைவாக இந்த இரண்டு கைக்குண்டுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தாண்டியடி விசேட அதிரடிப்படையினர் குறித்த இரண்டு குண்டுளையும் மீட்பதற்காக நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

இது தொடர்பில் வவுணதீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.09.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.